"ஈசன் நெறிபரப்ப இன்தமிழ் வளர்ப்போம்"

# கலசம்
# KALASAM

ஐப்பசி - கார்த்திகை - மார்கழி - 2022




ISSN 2055-6616

இலண்டனிலிருந்து இலவசமாக வெளிவரும் முதல் ஆன்மிகக் காலாண்டிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MSR GROUP
EST 2005

# MSR GROUP

Chartered Management Accountants

OUR SERVICES:

- Accounting & Business Services
- Tax Consultancy
- Tax Investigation
- Locums & Umbrella Payroll
- Property Consultancy
- Mortgages
- Pension & Investment
- Insurance
- Will & Probate Services

CELEBRATING 15 YEARS OF EXCELLENCE 2005 · 2020

The Parliamentary Review
BEST PRACTICE REPRESENTATIVE

Best Practice Representative Selected by Parliamentary Review

Head office:
MSR House, 329 Ley Street
Ilford
Essex
IG1 4AA

Regional office:
MSR Chamber, 349 Ley Street
Ilford
Essex
IG1 4AA

Contact:
T: 020 8514 2678
F: 020 8514 6963
E: office@msrgroup.org.uk
W: msrgroup.org.uk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணி 30

# கலசம்
# KALASAM

ஒலி 104

கலசம்

www.saivamunnettasangam.com

Charity Registration No:292085

FREE ISSUE

கலசம்
நிருவாகக் குழு

ஆசிரியர்
க ஜெகதீஸ்வரன்

உதவி ஆசிரியர்கள்
சி அற்புதானந்தன்
சுதர்சினி வாகீசன்

விநியோகம்
சோ நிரஞ்சன்
சு இரத்தினராஜா

விளம்பரம்
நிருவாகம்
மா இந்துசேகரன்
வ இ இராமநாதன்

இலங்கைத் தொடர்பு
வை சிவனருட்செல்வர்
தொலைபேசி
0766167547
மின்னஞ்சல்
svarul@yahoo.co.uk

வெளியீடு
சைவ முன்னேற்றச்
சங்கம்

முகவரி
SMS
2 Salisbury Road
Manor Park
London E12 6AB

Tel:
020 8514 4732

மின்னஞ்சல்
email:
smsukkalasam@gmail.com

## அதுவும் வேண்டும்; இதுவும் வேண்டும்

படமாடக் கோயிற் பகவற்கொன் றீயின்
நடமாடக் கோயில் நம்பற்கங் காகா
நடமாடக் கோயில் நம்பற்கொன் றீயின்
படமாடக் கோயிற் பகவற்க தாமே

என்பர் திருமூலர். வாரியார் சுவாமிகள் இதை விளக்க ஓர் உதாரணம் கூறுவார். "அஞ்சற் பெட்டியிலே போடும் கடிதம் தலைமை அஞ்சலகத்துக்குச் செல்லும். ஆனால் தலைமையகத்தில் சேர்க்கும் கடிதம் பெட்டிக்கு வந்து சேராது" என்பதே அவர் கூறும் அந்த உதாரணம். எனவே மக்களுக்கு நாம் செய்யும் சேவை இறைவனைச் சென்றடையும்; இறைவனை மகிழ்விக்கும் என்பது தெளிவு.

மக்கள், அவரவர் செய்த முன்வினைப் பயனால், வசதி படைத்தவராகவோ, வசதியற்றவராகவோ, பொருள் அற்றவராகவோ, ஊனமுற்றவராகவோ பலப்பலவாக இருக்கிறார்கள். அவர்கள் வினைப்பயனை மாற்றவோ நீக்கவோ எம்மால் இயலாது. ஆனால், நம்மாலான உதவிகளை நமக்கு முடிந்தவரை அவர்களுக்குச் செய்வதால் அவர்களின் குறைகளை ஓரளவு குறைக்கலாம். அதுதான் தருமமுமாகும். நமக்கு முடிந்தவரை, பட்டினியைப் போக்குதல், கற்க உதவுதல் போன்ற தருமங்களைச் செய்வதால் அவர்கள் பயனடைவார்கள். நம்மை அவர்கள் வாழ்த்தவேண்டும் என்றோ, நமக்குப் புண்ணியம் கிடைக்கவேண்டும் என்றோ, புகழ் கிடைக்கவேண்டும் என்றோ ஒரு விநாடி மனதிலே நினைத்தோமானால், செய்த உதவிகள் அனைத்தும் பலனற்றுப்போய்விடும்.

இந்த நற்செயலை ஒரு காரணமாக வைத்து, சிலர் கோயில்களுக்கு நிதி கொடுப்பதை நிறுத்திவருகிறார்கள். கடவுள் நம்பிக்கை அற்றோருக்குக் கோயில் வேண்டியதில்லை. ஆனால், கடவுள் நம்பிக்கை உள்ள பலருக்கு கோயில் வழிபாடு அவசியமாகிறது. அந்தத் தேவையைப் பூர்த்திசெய்யக் கோயில்கள் தேவை. கோயிலைச் சார்ந்து பல குடும்பங்களும் வாழ்கின்றன. அர்ச்சகர்கள், ஓதுவார்கள், மங்கல இசைக் கலைஞர்கள், மாலை கட்டுவோர் எனப் பலர் கோயிலைச் சார்ந்தே வாழ்கிறார்கள். அது தவிர, பிரசாதம் செய்ய, விளக்கேற்ற, வரும் அடியார்களுக்கு அன்னதானம் செய்ய, கட்டடங்களைப் பழுதுபார்க்க என்று பலவகையான செலவுகள் கோயிலில் உண்டு. அதை யார் கொடுப்பார்கள்?

எனவே மக்கள்சேவை மகேசன் சேவை எனப்பார்க்கும்போது அதுவும் வேண்டும் இதுவும் வேண்டும் என்ற முடிவுக்கே வரவேண்டியுள்ளது.

- க ஜெகதீஸ்வரன், ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த இதழில்


காலம் கடந்தேங்கும் இதயம் 03

கரந்துறைதல் - கந்தபுராணச் சிந்தனைகள் 06

கலசம் ஆசிரியர் அவர்களுக்கு 08

"அடியார்தமை அமுது செய்வித்தல்" 09

நல்லவேளை நாவலரில்லை 11

நவயோகம் 12

கன்னியாகுமரி - பயணக் கட்டுரை 14

சிவனும் பார்வதியும் ஆடிய சதுரங்கம் 17

திருவெம்பாவை 26

திருக்குறள் கதைகள் 29

பாஞ்சாலி சபதம் 31

முருகன் தலம் மூன்று 34

இராசன் வாத்தியார் 37

Glory of Lord Shiva 41

சேக்கிழார் 42


**அட்டைப்படம்: வடிவமைப்பு - குகன்**

**கட்டுரைகளில் உள்ள கருத்துக்களுக்குக் கட்டுரையாளரே பொறுப்பாவர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலம் கடந்தேங்கும் இதயம்

## சபரி கண்ணப்பன்

வாழ்க்கையை அப்படியே பிரதிபலிப்பது தான் இலக்கியம் என்று சிலர் இலக்கியத்துக்கு இலக்கணம் வகுக்கிறார்கள். அவர்களுடைய அளவு கோலுக்குங் கூடப் பொருந்துவதாக, "அறுபத்துமூன்று மனிதர்களுடைய வாழ்க்கையை அப்படியே எடுத்துச் சொல்லும் நூலாக" பெரிய புராணம் அமைந்திருப்பதைக் காண்கிறோம். பக்திக் காவியமாக "சைவ சமயிகளின் பாராயண நூலாக" பெரியபுராணம் அமைந்துவிட்ட காரணத்தால் அதனை ஒப்புயர்வற்ற இலக்கியமாக ஏற்றுக் கொள்வதற்குப் பலர் முன்வருவதில்லை. பக்தியே பெரிய புராணத்தின் உயிர் நாடியாக "ஆதாரசுருதியாக" அமைந்திருக்கின்றதென்ற போதிலும் இலக்கிய இன்பத்துக்காகவும் அந்த நூலைப் படிப்பதற்குத் தமிழின் சுவையை உணர்ந்தோரெவருந் தயங்கவே கூடாது. அப்படித் தயங்குவதாலே தலைசிறந்த காப்பியமொன்றைத் தம் வாழ்நாளிலே கற்றுச் சுவைக்கத் தமிழ்மக்கள் தவறவிடுவரென்றே கூறவேண்டும்.

"ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடலில்
நாழி முகவாது நானாழி"

என்பது எத்துணை உண்மையென்பதை இந்த நூலைப் படிக்கக் கிடைக்கும் போதெல்லாம் உணர்கிறேன். பாற்கடலாகிய பெரிய புராணத்திலே பன்முறை முழுகித் திளைப்பினும் நாம் உயர்ந்த கொள்கலங்களாக இன்மையால் "நமதுள்ளம் வெறும் மந்தரமலையாகவே இருப்பதால்" அங்குள்ள இலக்கிய அமுதத்தை முற்றாக முகந்து துய்க்க முடிவதில்லை. எனவே, மகத்தான இலக்கியச் செல்வமென இன்றெல்லாராலும் ஏற்றுக்கொள்ளப்படும் கம்பனது செய்யுள்களோடு சேக்கிழாரது செய்யுள்களை ஒரு புடை வைத்து ஒப்பு நோக்குந் திறனாய்வு முயற்சிகளே பெரியபுராணத்தின் இலக்கியச் சிறப்பை மக்கள் ஓரளவு உணர்ந்துகொள்ள வழிவகுக்கும் என்று கருதுகிறேன்.


கம்பர்

தசரதன் கைகேயியிடம் வருகிறான். மதியின் மறுத்துடைப்பாள் போல் வாணுதற்றிலகத்தை அழித்து, மாமணிக் கலனனைத்துந் தனித்தனி சிதறி, பூவுதிர்ந்ததோர் கொம்பெனப் புவிமிசைப் புரண்டு கிடக்கிறாள் அவள். அவளைச் சமாதானஞ் செய்து விஷயத்தை அறிந்ததும் விஷந் தலைக் கேறியவன் போல் திகைத்துவிடுகிறான் தசரதன். இறுதியாக ஒரே ஒரு வேண்டுகோள் விடுக்கிறான். "கண்ணே வேண்டு மென்னினு மீயக்கடவேன்" என்று தொடங்கி, "பெண்ணே வண்மைக் கேகயன் மானே!" என விளித்து, "மண்ணேகொள் நீ மற்றையதொன்றும் மற" வென்கிறான். கூடல் இழைத்து, அது பிழைத்து, எங்கே கூடலின்றி வாடல் என்ற நிலை வந்துவிடுமோ என்ற அச்சத்தால் கூடல் இளைப்பாள் போற்காட்டி இழையாதிருக்கிறாள் முத்தொள்ளாயிரப் பெண்ணொருத்தி. அந்தப் பெண்ணினது இரங்கத்தக்க நிலையிலேதான் தசரதனும் இருக்கிறான். வரமிரண்டிலே இரண்டாவது வரத்தை வாயாலே சொல்லவும் அஞ்சுகிறான் அவன். நாவாலுரைத்தாலே, நடக்கக் கூடாதது நடந்துவிடுமோ என்ற அச்சம் அவனை "மற்றையதொன்றும் மற" என்று மன்றாட வைக்கிறது. "மற்றையதொன்றும் மற" என்ற அடியைக் கேட்டதும் தசரதன் துயரிலாழ்ந்திருக்கிற சமயம் இது என்பதையும் மறந்து நாம் குதூகலிக்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தசரதனது புத்திர வாஞ்சையை எத்துணை எளிதாகக் கம்பன் எடுத்துக் காட்டிவிட்டான் என்று மகிழ்கிறோம்.

இனி மற்றொரு சந்தர்ப்பத்தை இதே கம்பராமாயணத்திலே காண்போம். இந்திரஜித்தன் என்ற இணையற்ற வீரன் இறந்துவிட்டான். மகன் மாண்டானெனக் கேட்ட மண்டோதரி தலையின் மேற் சுமந்த கையளாய், தழலின் மேல் மிதிக்கின்றால் போல் ஓடோடிவந்து, மலையின் மேல் மயில் வீழ்ந்தென்ன மைந்தன்மேல் மறுகி வீழ்ந்து,

"அஞ்சினேன் அஞ்சி னேனிச்
சீதையென் றமுதாற் செய்த
நஞ்சினா னிலங்கை வேந்தன்
நாளையித் தகைய னன்றோ"

என்று புலம்புகிறாள். இங்கும் நாம் சோகமிக்க சூழ்நிலையை மறந்து குதூகலிக்கிறோம். தனது கணவன் இறப்பானெனக் கனவிலுங்கூற அஞ்சுமக் கற்புடைத்தெய்வம் நாளை இத்தகையனன்றோ என்று சோகத்தின் சிகரத்தில் நின்று கலங்குவதைக் கண்டு கம்பனைக் கைகூப்பித் தொழவுந் தயாராகிவிடுகிறோம்.

இனிப் பிறிதொரு காட்சி. 'மெய்யெலாம் நீறு பூசி, வேணிகள் முடித்துக்கட்டி, மைபொதி விளக்கேயென்ன மனத்தினுட் கறுப்பு வைத்து, பொய்த்தவ வேடங்கொண்ட' முத்திநாதன் மெய்ப்பொருள் நாயனாரைக் கொல்வதற்காகக் கையினிற் படை கரந்த புத்தகக் கவளி ஏந்தித் திருக்கோவலூர் செல்கிறான். அவன் எதற்காகத் திருக்கோவலூர் செல்கிறான் என்று சேக்கிழாரைக் கேட்டால் என்னபதில் சொல்வாரென்று நினைக்கிறீர்கள்? "செப்பரு நிலைமை யெண்ணித் திருக்கோவலூரிற் சேர்ந்தான்" என்றுதான் பதில் கிடைக்கும். அவன் எதற்காகச் சென்றான் என்றா கேட்கிறீர்கள் ஐயோ! கேட்காதீர்கள். நினைக்கவே உள்ளம் நடுங்குகிறது. அது என்னாலே செப்புவதற்கு அரியதொரு செயல். அதனை நினைந்தே அப்பாதகன் சென்றான் என்கிறார் அவர். சரி அவன் சென்று மெய்ப்பொருள் நாயனாரைக் கொன்றே விட்டான். அப்போதாவது அவர் வாயைத் திறந்தாரா? அப்போதுங் கண்களில் நீர் சோர "தான் முன் நினைந்த அப்பரிசே செய்ய மெய்த்தவ வேடமே மெய்ப்பொருளெனத் தொழுது வென்றார்" என்றுதான் சொல்கிறார். கொன்றான் என்று சேக்கிழார் கூறவேயில்லை; கூற அவரால் முடியாது.

"ஒழுக்கம் உடையவர்க் கொல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல்"


சேக்கிழார்

இப்போது ஒரு கேள்வி. சேக்கிழார் கூறுவதிலே என்ன புதுமை இருக்கிறது? கம்பன் கையாண்ட அதே உத்தியைத்தானே அவர் கையாண்டிருக்கிறார் என்று கேட்கலாம். கேள்வியில் நியாயம் இருக்கிறது. ஆனால் ஒன்றைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். தசரதனாகவும், மண்டோதரியாகவும் நின்றுதான் கம்பன் பேசுகிறான். எனவே, தந்தையின் நிலையில் தாயின் நிலையில் அவன் பேச்சு நிகழ்கிறது. அதுவும் தமது புத்திர வாத்ஸல்ய மேலீட்டினால் அவர்கள் பேசுகிறார்கள். அவர்களது துன்பத்திற்குக் காரணமான செயல் நடந்த சூட்டோடு பேசுகிறார்கள். ஆனால், சேக்கிழார் அப்படியொரு உறவுமுறை ஸ்தானத்திலிருந்தா பேசுகிறார்? இல்லயே இல்லை. எப்போதோ நிகழ்ந்துவிட்டதோர் அநுசிதமான செயலுக்குக் காலங் கடந்து நின்றேங்கும் நல்லிதயம் ஒன்றைப் பெரிய புராணத்திலே காண்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றொரு விஷயத்தையும் நாம் கவனிக்க வேண்டும். கம்பனுக்கு முன்பு வாழ்ந்தவர் சேக்கிழார் என்பதைக் கால ஆராய்ச்சியாளர் அனைவருமே ஏற்றுக் கொள்கிறார்கள். இப்படிக் கூறுவதனாற் கம்பர் சேக்கிழாரைப் பின்பற்றிப் பாடினார் என்று சொல்ல நான் முயலவில்லை. ஆனால் கம்பருக்கு முன்பே இத்தகைய முறையிற் சேக்கிழார் பாடியுள்ளார் என்பதை எவரும் மறுக்க முடியாதல்லவா?

நேசம் நிறைந்த உள்ளத்தால் நீலம் நிறைந்த மணிகண்டத்
தீச னடியார் பெருமையினை எல்லாஉயிருந் தொழவெடுத்துத்
தேச முய்யத் திருத்தொண்டத் தொகைமுன் பணித்த திருவாளன்
வாச மலர்மென் கழல்வணங்க வந்த பிறப்பை வணங்குவாம்.

- சேக்கிழார்

# அறிவோம் ஆன்மீகம்

**நாம் இன்று அநுபவிக்கும் சுகமும் துக்கமும் போன ஜென்மத்து கணக்கென்றால், அது பிற மதத்தினருக்கு எவ்வாறு சரியாகும்?**

நமது சனாதன தர்மத்தில் ஆத்மா என்பது ஆண், பெண், அலி என்றோ, இந்த ஊரைச் சேர்ந்தது என்றோ, இந்த மொழி, இந்த இனம், இந்த மதம் என்றோ எவ்வித பாகுபாடும் அற்றது என்று கூறுகிறது. எனவே இக்கர்மவினைகள் என்பது பொதுவான தர்மம். இதை ஒவ்வொரு ஜீவனும் அதன் கடைசி மூச்சுக்குப் பிறகு ஆத்ம ஸ்வரூபத்தில், தனது வாழ்நாளில் நடந்த புண்ணிய பாவங்களைச் சூட்சும ரூபமாக மறு ஜென்மத்திற்கு எடுத்துச் செல்கிறது. இதன் அடிப்படையிலே மறுபிறப்பு உண்டாகிறது.

யோசித்துப் பாருங்களேன்! வேறொரு மதத்தைச் சேர்ந்தவர்களுக்கு நல்ல முயற்சி செய்தும் ஒரு காரியம் நிறைவேறவில்லை. அவர்கள் என்ன சொல்வார்கள்? 'லக்' இல்லை என்று சொல்வார்கள். 'லக்' அல்லது அதிஷ்டம் என்று எதனைக் குறிப்பிடுகிறார்கள்? நமது கர்ம வினைகளின் தத்துவத்தின் அடிப்படையில்தான் உலகிலுள்ள அனைத்து ஜீவராசிகளும் இயங்குகின்றன. இந்து மதம் உலகின் பொதுவான மதம். அனைத்துக்கும் தாய் மதம். உலகிலுள்ள அனைத்துவிதமான நல்ல சிந்தனைகளையும் தன்னுள் கொண்டுள்ளது. இதன் காரணத்தினால்தான் உலகில் எங்குமே காணமுடியாத ஒற்றுமை நமது பாரத திருநாட்டில் காணப்படுகிறது. அதற்குக் காரணம் இந்தப் பூமி வேதங்களை அடிப்படையாகக் கொண்டமைதான்.

**எமது ஊர் விநாயகர் ஆலயத்தில் அர்ச்சகர் மாலை நேரத்தில் வரமாட்டார். அதனால் மாலை நேரத்தில் யார் வேண்டுமானாலும் கருவறையினுள் சென்று விளக்கேற்றலாமா?**

பொதுவாக ஒவ்வொரு ஆலயத்திற்கும் சில சம்பிரதாயங்கள் உள்ளன. அதனதன் அடிப்படையிலே அனைத்தும் நடைபெற வேண்டும். எனினும் சம்பிரதாயம் என்பது சாஸ்திரங்களுக்கு முரண்பட்டதாக இல்லாமல் அதற்குச் சம்மதம் உடையதாக இருத்தல் வேண்டும். பொதுவாக ஆலயங்களில் ஒரு காலம் முதல் எட்டுக் காலங்கள் வரை பூசை செய்யலாம்.

இவையெல்லாம் முன்னரே நியமிக்கப்பட்டு அதன்படி செய்யப்பட வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் மாற்றப்படக்கூடாது. பூஜை செய்ய நியமனம் இல்லாதவர்கள் எந்தக் காரணத்தைக் கொண்டும் கருவறைக்குள் செல்லக்கூடாது.

நன்றி: "அறிவோம் ஆன்மிகம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரந்துறைதல்

## கந்தபுராணச் சிந்தனைகள்

ஒரு தலைவனுக்கு அவன் உலகத்தின் தலைவனாயினும் சரி, எந்த ஒரு நாட்டின் தலைவனானாலும் சரி, ஒரு இனத்தின் தலைவனானாலும் சரி ஒரு குடும்பத்தின் தலை வனானாலும் சரி தன்னைச் சார்ந்தவர்களின் வளர்ச்சியும் மேன்மையும் உயர்ச்சியுமே என்றும் நோக்கமாக இருக்கும். அவனுடைய முயற்சிகள் எல்லாம் இந்த ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டிருக்கும். ஆனால் முன்னேற்றத்துக்கும் உயர்ச்சிக்கும் எவ்வளவோ தடைகளும் இடையூறுகளும் இன்னல்களும் சோதனைகளும் வந்துகொண்டேயிருக்கும். இதனாலே வசதியான கால நேரத்திலே முயற்சிகளைத் தொடர வேண்டுமென்றும் வசதியற்ற சூழ்நிலையில் அமை தியாகப் பொறுத்திருக்க வேண்டுமென்றும் சொல்வர். ஒரு குளத்திலே மீன் பிடிக்க இருக்கும் கொக்கு, சகல இயக்கமும் அடங்கி, தன்னுடைய தாக்குதலெல்லைக்கு ஒரு அளவான மீன் வரும்வரை காத்திருக்கும். அவ்வாறு ஒரு மீன் வந்தவுடன் தன்னுடைய முழுச்சக்தியையும் பிரயோகித்து அம்மீனைக் குத்திப் பியத்துவிடும். இதனையே வள்ளுவப் பெருமானும் “பொறுத்திருக்கும் காலத்திலேயே கொக்குப்போல அமைதியாக இருக்க வேண்டும், காலம் வாய்த்தபோது அதனுடைய குத்துப்போலத் தவறாமல் செய்து முடிக்க வேண்டும்.” என்ற பொருளுடைய குறளின் மூலம் கூறுகிறார்.

கொக்கு ஒத்த கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த இடத்து

ஆனால் இந்தக் கூம்பும் பருவத்து பொறுமையாயிருத்தல் இலகுவான காரியமல்ல. இந்தச் சூரன் சிவபெருமானிடம் பெரு வரங்கள் பெற்று மன்னாதி மன்னனாகிறான். இந்திரனுக்கும்

Dr க சிவலோகநாதன்

தேவர்களுக்கும் கடினமான காலம் தொடங்குகிறது. பலவிதமான இன்னல்களுக்கு ஆளாகிறார்ககள். தேவர்கள் அசுரர்களுக்கு மீன் சுமந்து உழன்றார்கள். இந்திரன் பெருமுயற்சியால் சிவபெருமானின் அருள்பெற்று முருகப்பெருமான் மூலம் சூரனைக் கிளையோடு மாய்த்து, பழைய கீர்த்தியைத் தேவர்களுக்குப் பெற்றுக் கொடுக்கிறான். இந்த இடைக்காலத்திலே அவன் ஒளித்து வாழ்கிறான். கரந்து உறைகிறான். இந்தக் கரந்துறைதல் காலத்தில் அவன் எவ்வாறு வாழ்ந்தான் என்பதை ஆராய்வோம்.

கற்பகதருவின் நிழலிலே சகல ஐஸ்வரியங்ளுடனும் இருந்த இந்திரன், இப் பூலோகத்திற்கு வந்ததும் தான் வதிவதற்கான ஒரு நல்ல இடத்தைத் தேர்ந்தெடுத்தான். சீர்காழியைத்தான் தான் வதிவதற்கேற்ற இடமாகத் தேர்ந்தெடுத்த இந்திரன் அங்கு ஒரு நந்தவனத்தை அமைத்துச் சிவபெருமானுக்கு உள மகிழ்வுடன் பூசைசெய்து வருவோமென எண்ணி அதற்குள் ஒரு பூஞ்சோலையை உண்டாக்கினான். அதிலே அகில், பலா, சந்தனம் தேமா முதலிய பல வகையான மரங்களையும் செடிகளையும் வைத்து ஒரு சோலையை உண்டாக்கினான். அவை மிகவும் செழித்து வளர்ந்தன. அவற்றில் நிறையப் பூக்கள் மலர்ந்தன. அம் மலர்களைக் கொண்டு சிவனடிகளைப் பூசித்து அங்கு மனைவியுடன் இருந்து வந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை முதலாகியுள்ள தருக்களும் புகலுமெல்லாம்.
நவையறத் தெரிந்து வைத்தோர் நந்தவனத்தைச் செய்ய
அவைமிக மலர்ந்த தம்மா அம்மலர் கொண்டுநாளுஞ்
சிவனடி அருச்சித்தங்கட்டேவியோடிறைவன் உற்றான்.

- இந்திரன் கரந்துறை படலம் 43

இவ்வாறிருக்கும் காலத்திலே சூரனுடைய ஒற்றர்கள். இந்திரனையும் இந்திராணியையும் தேடினார்கள். இதனையறிந்த இந்திரனும் இந்திராணியும் மூங்கில் மரங்களாகி மாறி நின்று தவம் செய்தனர். ஒற்றர்கள் அவர்களைக் காணாது திரும்பிப் போயினர். இவ்வாறிருக்கும் காலத்திலே மழை பெய்யாது போக, நந்தவனம் வாட, பூக்கள் இல்லாது போனது. இந்திரன் கவலை கொண்டான். நாரத முனிவர் அவன் முன் தோன்றினார். நாரதரின் ஆலோசனைப்படி விநாயகப்பெருமானை வணங்கி அவர் மூலம் அகத்தியரின் கமண்டலித்திலிருந்து காவிரியை விடுவிக்கிறான். மீண்டும் நந்தவனம் பூத்துக் குலுங்குகிறது. இந்திரன் தொடர்ந்தும் தவம் செய்கிறான். இவ்வாறாகக் "கூம்புப் பருவத்தை" இந்திரன் தவத்திலே கழிக்கின்றான்.

பிறகு "சீர்த்த இடம்" தொடங்குகிறது. ஒருநாள் தேவர்கள் இந்திரனைக் காண்கின்றனர். அவர்கள் அவனைப் பார்த்து, "அசுரரின் கொடுமை தாங்கமுடியவில்லை. சூரரை அழித்து நாம் பழையபடி நிலைமையை அடைய ஏதாவது செய்யுங்கள்!" என்று வேண்டுகின்றனர். இந்திரன் கைலைக்குச் செல்கிறான்.. சிவபெருமானைக் காணமுடியவில்லை. அங்கு காவலிருக்கிறான். அந்த நேரத்திலே இந்திராணியை அசமுகி கடத்த முயல்கிறாள். இந்திரன் திரும்பவும் சீர்காழிக்கு வந்து இநதிராணியையும் அழைத்துக்கொண்டு மேருமலைக்குச் செல்கிறான். அங்கு தம் குறைதீர, சூரனின் அழிவை வேண்டி சிவபெருமானைக் குறித்துத் தவம் செய்கிறான். சிவபெருமான் அவன் முன் தோன்றினார். தோன்றி, "உனக்கு என்ன வரம் வேண்டும்" என்று கேட்கிறார். இந்திரனுக்கு தகுந்த சந்தர்ப்பம் கிடைக்கிறது. கொக்கின் குத்துப்போலத் தவறாது இலக்கை அடைகிறான். "சொல்ல முடியாத பாவங்களை உடைய சூரபத்மன் என்னைத் துன்புறுத்தி என் மகனையும் பிறரையும் வருத்தித் தனது தலைநகரம் மகேந்திரபுரியில் சிறைவைத்தான். எம் தேவலோகத்தையும் அழித்தான். அவனைக் கொன்று எம்மை ஆதரிக்க வேண்டும்" என்று இந்திரன் வேண்டினான்.

பன்னரும் பழிசேர் சூரன் பருவரற் படுத்திப் பின்னர்
என்னொரு புதல்வன் தன்னை இமையவர் பலரை வாட்டித்
தன்னகர் சிறையிட் டெம்மூர் தழல்கொளிஇத் தவறு செய்தான்
அன்னவன் தன்னை யட்டே அளித்தியால் எம்மை என்ன.

-மேருப்படலம் 34

இந்திரன் வேண்டுதலுக்குச் செவிமடுத்த சிவபெருமான், முருகப்பெருமான் திருவவதாரம் செய்து சூரனை அழித்துத் தேவர்களைக் காப்பார் என வரம் கொடுத்தார். அவ்வாறே முருகப்பெருமானின் பேரருளினால் தேவர்கள் தம்முடைய பழைய உயர்நிலையை அடைந்தார்கள்.

இவ்வாறு பார்க்கும்பொழுது கரந்துறைய வேண்டிய காலத்தில், சிவசிந்தனையும் தவமுமே செய்யப்பட வேண்டியதெனவும் அத்தோடு உயர்வுக்கான விடிவுக்கான வழிமுறைகளை ஆராயவேண்டுமென்றும் சரியான சந்தர்ப்பத்தில் அம்முயற்சியைத் தொடங்க வேண்டுமென்றும் கந்தபுராணம் காட்டும் சைவத் தமிழ்க்கலாசாரம் சொல்லா நிற்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலசம் ஆசிரியர் அவர்களுக்கு!

இந்தக் கடிதத்தைப் பிரசுரிப்பீர்களா இல்லையா என்று தெரியாது. இருந்தாலும் எழுதுகிறேன். இந்த ஆண்டு (2022) ஜூன் மாதம், சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம் மாநாடு ஒன்று நடத்தியதை நீங்கள் அறிவீர்கள். "திருவாசகத்தின் சிறப்பு" என்பதே அவர்களின் தலைப்பு. மாநாட்டில் ஒரு மலர் வெளியிட்டார்கள். உள்ளே முதற் பக்கம் பார்த்தவுடனேயே தலை சுற்றியது. அந்த மலரிலே சிவபுராணம் அச்சாகியிருந்த விதந்தான் தலை சுற்றியதன் காரணம்.


ஒரு நடராஜர் படம். அதன் கீழே தலைப்பு சிவபுராணம் என்றிருந்தது. ஆனால், வழமையாகத் திருமுறைகளுக்கு முன்னால் எழுதப்படும் "திருச்சிற்றம்பலம்" இல்லை. சிவபுராணம் என்ற தலைப்பின் கீழ், தொல்லையிரும்பிறவி என்ற பாடல். தொடர்ந்து "நமச்சிவாய வாழ்க" என்று அடுத்த வரியில் இருந்தது. "வாஅழ்க" என்று இருக்கவேண்டும் இல்லையா! வேறும் பல எழுத்துப்பிழைகள் அதிலே இருந்தன. பரவாயில்லை. இப்படி ஒரு விழாவிலே மலர் அச்சாகும்போது எழுத்துப்பிழை வருவதைத் தவிர்ப்பது கடினம்.

ஆனால் எனது மனம் ஆதங்கப்பட்டதற்கு வேறு காரணங்கள் இருந்தன. அவையாவன:
திருமுறைக்கு முன்னால் திருச்சிற்றம்பலம் போடுவது என்று ஒரு முறை இருக்கிறது. அது இங்கே இல்லை.

திருவாசகத்தை முன்னர் அறியாது, முதன்முதல் பார்ப்பவர் தொல்லையிரும்பிறவிதான் சிவபுராணத்தின் முதல் வரி என்று நினைப்பார்கள். ஏனெனில் "சிவபுராணம்" என்ற தலைப்பின் கீழே "தொல்லை இரும்பிறவி" என்று தொடங்குகிறது.

சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம் பதிப்பு என்பதால், அவர்கள் பிழை இல்லாமல் சரியாகத்தானே அச்சிட்டிருப்பார்கள் என்று என்போன்றவர்கள் பார்ப்பார்கள்; அதை மந்திரமாக ஏற்பார்கள்.

முன்னர் சில கலசம் இதழ்களில் "தொல்லை இரும்பிறவி" திருவாசகம் அன்று. அதைச் சிவபுராணத்தின் முன் பாடுவதைத் தவிர்க்கவேண்டும் என்று நீங்கள் எழுதியது ஞாபகம். இப்போது, பாடுவதென்ன, பாடலே சிவபுராணமாகச் சிவபுராணத்துள் நுழைந்துவிட்டது. அடுத்த தலைமுறை தொல்லை இரும்பிறவிதான் சிவபுராணத்தின் முதல் வரி என்று நினைக்கப்போகிறது. இதற்கு என்ன செய்யப் போகிறீர்கள். மாநாடு நடந்து பல மாதங்கள் ஆகிவிட்டன. அதனால் உங்களுக்கு நினைவூட்ட அந்தப் பக்கத்தைப் படம் பிடித்து அனுப்பியுள்ளேன்.


சிவபுராணம்

தொல்லை யிரும் பிறவிச் சூழும் தளை நீக்கி
அல்லல் அறுத்தானந்தம் ஆக்கியதே எல்லை
மருவாநெறி யளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் மென்னும் தேன்

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம் ஆகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க

வேகம் கெடுத்தாண்ட வேந்த னடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறந்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவா ருண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவா ரோங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க

ஈசனடி போற்றி எந்தையடி போற்றி
தேசனடி போற்றி சிவன்சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி

இனி உங்களுக்கு இது "ஓயாத 'தொல்லை' தான்"

அன்புடன்
வி பாலசிங்கம் (வடக்கு இலண்டன்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'அடியார்தமை அமுதுசெய்வித்தல்'

சிவநேசர் என்ற அன்பர் ஒரு மண்குடத்தில் சாம்பரைக் கொண்டுவந்து திருஞான சம்பந்தர் முன் வைத்து வணங்குகிறார். அவரின் மகள் பூம்பாவையின் உடலைத் தகனம் செய்த சாம்பர் அது. அவர் திருஞான சம்பந்தரை வணங்கியபோது, அவரின் உளக்குறிப்பை அறிந்து, "மட்டிட்ட புன்னையங் கான மடமயிலை" என்று தொடங்கும் தேவாரப் பதிகத்தைச் சம்பந்தர் அருளுகிறார். பூம்பாவை உயிர்பெற்று எழுகிறார். இறந்த நாளிலிருந்து அன்றுவரை எவ்வளவு வளர்ந்திருப்பாரோ, அவ்வளவு வளர்ச்சி அவரின் தோற்றத்தில் தெரிகிறது.

பதிகத்தின் முதலாவது தேவாரத்திலே "உருத்திர பல்கணத்தார்க்கு அட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்" என்கிறார் சம்பந்தர். திருவிழாக் காலத்தில் சிவனின் அடியார்களுக்கு, மாகேசுரர்களுக்கு, அன்பர்கள் உணவளிக்கும் காட்சியைக் காணாது போனாயோ பூம்பாவையே என்பது இதன் பொருள். சிவனடியார்களுக்கு உரிய மரியாதை செய்து உபசரித்து அமுதளிப்பதை "மாகேசுர பூசை" என்று சொல்வர்.

இந்தக் காட்சியை விவரிக்கும் தெய்வச் சேக்கிழார், திருத்தொண்டர் புராணத்திலே,

> மண்ணினில் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும்
> அண்ணலார் அடியார்தமை அமுது செய்வித்தல்
> கண்ணினால் அவர் நல்விழாப் பொலிவுகண்டு ஆர்தல்
> உண்மையாம் எனில் உலகர்முன் வருகஎன உரைப்பார்

என்று குறிப்பிடுகிறார்.

எனவே சிவனடியார்களுக்கு உணவளித்தல் என்ற மரபு பலநூறு ஆண்டுகளாக இருந்து வருகிறது என்பது தெளிவு.

இன்றும் பல கோயில்களில் அன்னதானம் நடைபெறுவதைக் காணலாம். இது தவிர, வீடுகளிலும் சிவனடியார்களை வரவழைத்து உணவு கொடுத்து உபசரிக்கும் பழக்கம் இருந்தது. இளையான்குடி மாறன் நாயனார், சிறுத்தொண்டர் போன்றோர் ஒவ்வொரு நாளும் சிவனடியாருக்கு உணவு கொடுத்தபின்னரே தாம் உண்டதாகப் பெரியபுராணத்தில் அறியலாம்.

திருக்கோயில்களிலும் அன்னதானம் செய்யும் வழக்கம் உள்ளது. ஊரிலுள்ள ஏழைகள் வந்து இறைவனை வணங்கி, அங்கே வழங்கப்படும் உணவை உண்டு மகிழ்ந்து செல்வார்கள்.

இந்த வழக்கம் சைவத் தமிழருக்கு மட்டும் உரிய பண்பன்று. வேற்று மதத்தவர்களும் தமது வழிபாட்டிடங்களில் உணவு வழங்குவார்கள். அங்கு யாரும் எந்நேரமும் சென்று உணவு பெற்று உண்ணலாம்.

அரசியல் மாற்றங்கள், வன்முறைகள், யுத்தங்கள் காரணமாகப் பல மக்கள் தமது சொந்த இடங்களை விட்டு, வேற்று நாடுகளில் வாழ்கிறார்கள். அந்தந்த ஊர்களிலே கோயில்களும் கட்டி வழிபட்டுவருகிறார்கள். வழிபாடு நிறைவானதும், பிரசாதம் வழங்கல், அன்னதானம் முதலியன நடைபெறுகின்றன. அந்த விதத்தில், இடம் பெயர்ந்து வந்தாலும் மரபைப் பேணுவது பாராட்டப்படவேண்டிய விடயமே! ஆனால்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னதானங்கள், பிரசாதங்கள் கோயில் வளாகத்திலேயே தயாரித்துப் பரிமாறப்படுவதுதான் வழக்கம். இன்றும் பல கோயில்களில் இந்த வழக்கமே இருக்கிறது. மேற்கு நாடுகளில் உள்ள சில கோயில்கள் இதற்கு விதிவிலக்காக இருக்கின்றன. அருகிலுள்ள உணவகத்திலிருந்தோ அல்லது தெரிந்த பரிசயமான உணவகத்திலிருந்தோ உணவைத் தருவித்து அடியார்களுக்கு அமுதளிக்கிறார்கள். இந்த முறை சரியானதா என்பது சிந்திக்கவேண்டிய விஷயம்.

ஒரு அடியாருக்கு வீட்டிலோ அல்லது கோயிலிலோ அமுதளிப்பதானால் எவ்வளவு தூய்மையாக அது செய்யப்படவேண்டும் என்பதற்கு ஒரு நல்ல முன்னோடியாக இருந்தவர் சிறுத்தொண்டரும் அவருடைய மனைவி திருவெண்காட்டு நங்கையுமாவர். சேக்கிழார் வாயால் அதைக் கேட்கலாம்.

அச்ச மெய்திக் கறியமுதா மென்னு மதனா லரும்புதல்வன்
உச்சி மோவார் மார்பின்கண் ணணைத்தே முத்தந் தாமுண்ணார்
பொச்ச மில்லாத் திருத்தொண்டர் புனிதர் தமக்குக் கறியமைக்க
மெச்சு மனத்தா லடுக்களையின் மேவார் வேறு கொண்டணைவார்

ஒரு திருத்தொண்டருக்கு ஆக்கும் அமுது சுத்தமாகத் தயாரிக்கப்படவேண்டும். அதனால், தான் பெற்ற ஒரே மகனை இழக்கப்போகிறோம் என்று தெரிந்தும் ஒரு தாயின் இயல்பான செய்கையான உச்சிமோந்தல், மார்போடு அணைத்து முத்தம் கொடுத்தல் போன்ற எதையுமே திருவெண்காட்டுநங்கை செய்யவில்லை. அதற்கும் மேலே ஒருபடி போகிறார். சமைக்கப் போவதோ கறியமுது. இருந்தாலும் அடுக்களையில் குழந்தையை அரிந்தால் அசுத்தமாகும் என்று வெளியே கொண்டு சென்றார். அசுத்தம் ஆகக்கூடாதே என்ற பயத்தால் அப்படிச் செய்தார் என்பதை "மெச்சு மனத்தால் அடுக்களையில் மேவார்" என்று நயம்படப் பாடியுள்ளார் தெய்வப் புலவர் சேக்கிழார்.

நாம் நமது இல்லத்துக்கு உறவினரையோ நண்பரையோ விருந்துக்கு வரவழைத்தால், வீட்டிலேதான் அன்புடன் உணவு தயாரித்துப் பரிமாறுவோம். உணவகத்திலிருந்து எடுத்துக் கொடுப்பது பண்பன்று. அதை விடுத்து, ஒரு உணவகத்திலிருந்து உணவை எடுப்பித்துப் பரிமாறினால் அது நன்றாக இருக்காது அல்லவா? அன்புடன் தயாரிக்கும் உணவு தருவிக்கும் உணவைவிடச் சுவையிலே சற்றுக் குறைந்தாலுங்கூட வந்தவர்களை அது மகிழ்விக்கும். உணவின் சுவையைவிடப் பரிமாறிய அன்பைத்தான் அவர்கள் மதிப்பார்கள். அப்படி உபசரிக்க இயலாவிட்டால், அவர்களை அழைக்காமல் இருப்பதே மேல்.

அதுபோலவே கோயிலிலே சுத்தமாக இறைசிந்தனையுடனும் அன்புடனும் தயாரித்து வழங்கும் பிரசாதத்துக்கு மகிமை அதிகம். அதற்கு ஈடு இணையில்லை. சாதாரண, ஓரளவு சுவையான உணவு பரிமாறினாலே போதும். கோயிலில் தயாரிக்கும் உணவு எப்போதுமே சுவையாகத்தான் இருக்கும். கோயில் ஒரு வழிபாட்டு இடமேயன்றி உணவகம் அன்று.

உணவகத்தில் சுத்தமாகவோ அன்பாகவோ உணவு தயாரிக்கவேண்டிய கட்டாயம் அவர்களுக்கில்லை. இலாப நோக்குடன் தயாரிக்கும் உணவில் என்னென்ன சேர்ப்பார்கள், என்னென்ன தவிர்ப்பார்கள் என்பதும் தெரியாது. கோயிலுக்கு உணவு தயாரிக்கிறோமே என்ற சிந்தனையே சமைப்பவர் மனதில் இருக்காது. எனக்குத் தருகின்ற ஊதியத்துக்கு என் முதலாளி என்ன சொல்கிறாரோ, அதைச் செய்யவேண்டியது எனது கடமை என்ற சிந்தனையே அங்கே இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலய தருமகர்த்தாக்கள், அறங்காவலர்கள் இதுபற்றிச் சிந்திக்கவேண்டும். ஒரு.கோயிலை நிருமாணிக்குமுன் அந்தக் கோயிலை எப்படி நடத்தப்போகிறோம்; அதற்கு என்னென்ன தேவை; வாழும் நாட்டின் சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்பட்டு இருக்கிறோமா என்பதெல்லாம் கருத்தில் கொள்ளவேண்டிய விடயங்கள். அதை விடுத்து, குறுக்கு வழிகளில் கோயில் விவகாரங்களைக் கையாள்வது அழகன்று; முறையும் அன்று.

- ஞாலக்கோன்

## நல்ல வேளை நாவலர் இல்லை!

"கோயில் இல்லா ஊரிற் குடியிருக்க வேண்டா" என்பர். நாட்டில் போராட்டங்கள் நடைபெற்று நாடு நலிவுறும்வரை யாழ்ப்பாணத்தில் கோயில்கள் நன்றாகவே நடத்தப்பட்டன. நித்திய நைமித்திய பூசைகள் ஒழுங்காக நடந்தன. கும்பாபிஷேகங்கள், திருவிழாக்கள் சிறப்பாக நடந்தன. மக்களும் பஞ்சம், பசி என்று இன்றி நலமாக, செழிப்பாக இருந்தார்கள். வறுமையில் வாழ்ந்த குடும்பங்கள்கூடப் பட்டினியாக இருந்ததாகத் தெரியவில்லை.

போராட்டம் வந்தது. மக்கள் பலமுறை இடம்பெயரக் கட்டாயப்படுத்தப்பட்டார்கள். அடக்குமுறை ஆட்சி கோலோச்சியது. கோயில் வழிபாடுகள் தடைப்பட்டன. கோயில்கள் மூடப்பட்டன. பின்னர் ஓரளவு சுமுக நிலைக்கு வந்தபோதும், ஊரடங்குச் சட்டம் இருந்ததால், கோயில்கள் காலையில் தாமதமாகத் திறந்து மாலையில் நேரத்துடன் பூட்டப்பட்டன. இந்த நிலை அந்தச் சமயத்தில் தவிர்க்கமுடியாததாக இருந்தது.

இப்போது பல கோயில்கள் திருத்தப்பட்டுள்ளன. பல கோயில்கள் புதிதாக நிருமாணிக்கப்பட்டன. வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் பலரின் நிதியுதவியுடன் இந்தத் திருப்பணிகள் நடந்தன; நடக்கின்றன. திருவிழாக்களும் சில கோயில்களில் வெகு விமரிசையாக நடக்கின்றன. சில ஆடம்பரமாகவும் நடக்கின்றன. ஆனால், அர்ச்சகர்கள் தேவைக்கு இல்லை. ஒரே அர்ச்சகர் பல கோயில்களுக்குச் செல்லவேண்டிய நிலை உருவாகியுள்ளது. அவர்கள் "மோட்டார் சயிக்கிள்" எனப்படும் வாகனத்தில் ஒவ்வொரு கோயிலாகச் சென்று அர்ச்சனை செய்கிறார்கள். பூசைக்கு முன் அபிடேகம் நடக்கிறதா, திருவமுது செய்து படைக்கிறார்களா இல்லையா என்பதெல்லாம் பரம இரகசியம்.

நாட்டில் இப்போதும், பழக்க தோஷத்தால்போலும், கோயில்களை நேரத்துடன் பூட்டிவிடுகிறார்கள். அதனால் தரிசிக்க இயலவில்லை. உள்ளூர் மக்களும் கோயில் செல்வது மிகவும் குறைந்துவிட்டது. மிகப் பிரபலமான கோயில் ஒன்று நான் போனபோது மாலை 5.30 மணிக்கே பூட்டப்பட்டுவிட்டது. அப்போதுதான் சிவாசாரியார் பூட்டிவிட்டு வெளியே வந்தார். கேட்டால் மக்கள் வருவதில்லை, திறந்து வைப்பதால் என்ன பயன் என்றார். பலமைல் தூரத்தில் இருந்து வருகிறேன், வாழ்க்கையில் முதன்முதலாக வருகிறேன் என்று மன்றாடியும் மன்றாடியை அவர் தரிசிக்க விடவில்லை.

கந்தபுராணக் கலாசாரம், சைவ சித்தாந்தம், அநுட்டானம் என்று பலவற்றால் யாழ்ப்பாணத்துக்குப் பெருமை இருந்தது. நாவலர் காலத்திலும் அதன் பின்னரும் பல வருடங்களாக அந்தக் கலாசாரம் பேணப்பட்டு வந்தது. இப்போது அது அருகிவிட்டது. அதைச் சரிசெய்யவும் யாரும் இல்லை. கடவுளும் சில மக்களும் அங்கே பட்டினியுடன் இருக்கிறார்கள் என்றே தோன்றுகிறது. இதையெல்லாம் பார்த்து மனம் வருந்த, "நல்லவேளை - நாவலர் இல்லை"

- **அநுராதா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவயோகம்

திருமுறைகள் பன்னிரண்டாக வகுக்கப்பட்டுள்ளன. பத்தாவது திருமுறை திருமந்திரம். மற்றையவை தோத்திர நூல்கள் என்றும் திருமந்திரம் தோத்திரமும் சாத்திரமும் என்று அறியக்கிடக்கின்றது, திருமந்திரம் திருமூல நாயனாரால் அருளப்பட்டது. 3000 பாடல்களைக் கொண்டது. ஒன்பது ஆகமங்களை உள்ளடக்கி ஒன்பது தந்திரங்களாக வகுக்கப்பட்டுள்ளது. திருமூலநாயனார் திருக்கைலையில் சுந்தரநாதன் என்ற பெயருடன் தன்னுடைய ஞானகுருவாகிய நந்தி எம்பிரானிடம் உபதேசம் பெற்றார். பெற்றபின் உபதேசம் 30 என்ற நூலையும், மந்திரம் 300 என்ற நூலையும் இயற்றியுள்ளார் என்று அறியக்கிடக்கின்றது.

இதை திருமந்திரம் என்ற நூலில்,

"மூலன் உரை செய்த முப்பது உபதேசம்
மூலன் உரை செய்த முன்னூறு மந்திரம்
மூலன் உரை செய்த மூவாயிரம் தமிழ்
மூலன் உரை செய்த மூன்றும் ஒன்றே"

என்று கூறப்பட்டுள்ளது.

3000 பாடல்களைக்கொண்ட திருமந்திர நூலை கருத்தறிந்து ஓதுவது எம்மனோருக்கு இலகுவான காரியம் அன்று. அவைகளில் 30 பாடல்களைக் கொண்ட உபதேசப் பகுதியையும் 300 மந்திரங்களையும் ஒரு தேசிகரிடம் கற்றுத் தெளிந்தாலே போதும் என்ற எண்ணம் மேலோங்கி வருகின்றது. உபதேசப்பாடல்கள் சைவ சித்தாந்தக் கருத்துக்களை மிகுதியாகக் கொண்டிருப்பதாகவும் தெரிகின்றது. அந்த 30 உபதேசப் பாடல்களில் ஒரு பாடலை மாத்திரம் "ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்" என்ற முதுமொழிக்கிணங்க இந்தக்கட்டுரை சிந்திக்கவுள்ளது. அதைத் தொடங்கு முன் திருமந்திர நூலை அருளிய திருமூல நாயனாரின் சரித்திரத்தை மிகவும் சுருக்கமாகத் தருவது பொருத்தம் என்று எண்ணுகின்றேன்.

திருமூலநாயனார் இற்றைக்கு 8000 ஆண்டுகளுக்கு முன் இருந்தாரென்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். திருக்கைலையில் அவருடன் சேர்ந்த ஒன்பது முனிவர்கள் நந்தியெம்பெருமானிடம் உபதேசம் பெற்றார்கள் என்று தெரிகின்றது. சுந்தரநாதன் என்ற இயற்பெயர் கொண்ட திருமூலநாயனார் சிவபெருமானை நந்தியெம்பெருமான் என்றே திருமந்திரப் பாடல்களில் குறிப்பிட்டுள்ளார். அவர் இரண்டாம் முறையாக தவ சிரேஷ்டர் அகத்திய முனிவரைப் பொதிய மலையில் தரிசிக்க விரும்பி தெற்கு நோக்கி வந்தார். வரும் வழியில் தில்லைக்கூத்தனை வழிபாடு செய்துவிட்டு சாத்தனூர் என்ற இடத்திற்கு வந்து சேர்ந்தார். அவர் அங்கு கண்ட ஒரு காட்சி அவர் உள்ளத்தை உருக்கிவிட்டது. பசுக்களை மேய்க்கும் மூலன் என்ற பெயருடைய இடையன் உயிரிழந்து தரையில் கிடக்க அந்தப்பசுக்கள் அவனின் உடலைச் சுற்றிவந்து கண்ணீர் சிந்திக் களைத்துக் கதறி அழுவதைக் கண்டார். அந்த ஆக்களின் துயர் கண்டு பொறாது துடைக்க எண்ணி, பரகாயப்பிரவேசப் பயிற்சி உடையவர் ஆகையால் மூலனின் உடலில் தன் உயிரைச் செலுத்தி அவனை உயிர் பெற்றெழச் செய்தார். தன்னுடைய உடலை ஒரு மரப்பொந்தில் பத்திரமாகப் பாதுகாப்பாக வைத்துவிட்டு வந்தார். பசுக்கள் எல்லையற்ற மகிழ்ச்சியில் துள்ளிக்குதித்து ஆரவாரம் செய்தன. அந்த ஆக்களை உரியவர்களின் வீட்டிற்கு சேர்த்துவிட்டு திரும்பிவந்தார். வந்து தன்னுடைய உடல் காணாமல் போய்விட்டதைக் கண்டார். அதுவும் திருவருட் செய்கைதான் என்று உணர்ந்து சுந்தரநாதன் மூலன் என்ற பெயரைத்தாங்கிக் கொண்டு திருவாவடுதுறைக்கு வந்து சேர்ந்தார். அங்கே ஒரு அரச மரத்தின் கீழ் யோக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையில் இருந்து ஆண்டுக்கு ஒரு பாடலாக 3000 திருமந்திரங்களை அருளியதாக சரித்திரம் தெரிவிக்கின்றது.

இனி மேற்சொன்ன திருமந்திரப் பாடலைச் சிந்திப்போம். உபதேசப் பகுதியில் 10 ஆவது பாடல் அது:

சிவயோகமாவது சித்து அசித்து என்று
தவயோகம் புக்குத் தண்ணொளி தானாய்
அவயோகம் சாராமே அன்பு அதிபோக
நவயோகம் நந்தி நமக்கு அளித்தானே!

சிவயோகம் என்ற சொல் சைவ சித்தாந்த நூல்களில் எப்படி ஆளப்பட்டுள்ளது என்பதைப் பார்ப்போம். சிவஞானபோதம் பத்தாம் சூத்திரத்தில் ஏகனாகி நிற்க என்றும் சிவஞானசித்தியார் 298 ஆம் பாடலில் சிவோகம் பாவனை செய்தல் என்றும் கூறப்பட்டிருப்பதாக நாங்கள் எண்ண இடமுண்டு.

## "ஒரு சித்தாந்த மாணவன்"

சிவமும் ஆன்மாவும் அத்துவிதமாக கலந்து நிற்கும் நிலையைச் சிவயோகம் என்று குறிப்பதாக நாம் கொள்ளலாம். சிவத்தின் அறிவு வாலறிவு, சூக்கும சித்து, அகண்டகாரப் பேரறிவு எல்லாவற்றையும் அறிந்து அறிவிக்கும் அறிவு. ஆன்மாவின் அறிவு தூல அறிவு; சிற்றறிவு; அறிவிக்க அறியும் அறிவு. சிவத்தின் அறிவோடு ஒப்பிடும் போது ஆன்ம அறிவு அசித்து. சிவயோக நிலையில் ஆன்மா இதை உணர வேண்டும். அப்படி உணர்ந்த தவயோகமாகிய அத்துவித மார்க்கத்தில் ஆன்மா நீண்ட காலம் சிந்திக்க வேண்டும். இதைச் சிவோகம் பாவனை என்றும் ஏகனாகி நிற்கும் நிலை என்றும் கூறலாம். இப்படி இருந்தால் சிவனின் ஞான ஒளி ஆன்மாவிற்கு செறியும். அதை "தன்னொளி தானாய்" என்று பாடல் குறிப்பிடுகின்றது. மேலும் இந்த உணர்வை தாயுமானவ சுவாமிகள்,

"ஆரறிவார் என்று அனந்த மறை ஓலமிடும்
பேரறிவே இன்பப் பெருக்கே பராபரமே"

என்று பகர்கின்றார்.

இந்த நிலை வாய்க்கவும் ஆன்மா பயனற்ற, பலகாலும் அநுபவித்து அலுத்துப்போன உலகியல் இன்பங்களை நாடாது சிவத்தின் மேல் அன்பை மிகவும் அதிகமாக வளர்க்கும். இந்த மார்க்கத்தை நந்தியெம்பெருமான் நவயோகமாக எனக்கு அருளினான் என்று திருமந்திரம் கூறுகின்றது.

மூலன் உரை செய்த மூவாயிரந் தமிழ்
ஞாலம் அறியவே நந்தி அருளது
காலை எழுந்து கருத்தறிந்து ஓதிடின்
ஞாலத் தலைவியை நண்ணுவர் அன்றே !

வாழ்க திருமந்திரம்! வாழ்க திருமூல நாயனார் !!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கன்னியாகுமரி

## பயணக்கட்டுரை

முகவுரை:
பாரதத்தாயின் சிலம்பொலி எனக் கிழக்கே வங்கக்கடல், மேற்கே அரபிக்கடல், தெற்கே இந்தியப் பெருங்கடல் சேர்ந்து அலை மோதும் காட்சி அமைந்தது கன்னியாகுமரி. இந்தியாவின் தென் கோடியில் இருக்கும் இவ்விடம் தமிழ்நாட்டின் முப்பத்தைந்து மாவட்டங்களில் ஒன்றாகும். சென்னைக்கு அடுத்ததாக, மக்கள் தொகையில் இரண்டாம் இடம்பெறும் இவ்விடம், அறிவு, ஆற்றலில் தமிழ்நாட்டிலே முதலிடம் பெற்றது குறிப்பிடத்தக்கது. இங்குள்ளோர் அழகு தமிழில் ஆங்கிலம் கலக்காது பேசுவது - இலங்கைத் தமிழ்ப் பேச்சுப்போல் இருப்பது - யாவருக்கும் வியப்புத் தருவதாகும். யாவற்றிற்கும் மேலாக, சுடச்சுட அப்பம் சாப்பிட்டு ஏப்பம் விடக்கூடிய இடமுமாகும்.

நாகர் கோயிலைத் தலைநகரமாகக் கொண்ட கன்னியாகுமரி பொருளாதாரத்திலும் பின்தங்கியதன்று. கடல், காடு, மலை, மடு, வாவி, ஆறுகள், அருவிகள், திராட்சைச் செடிகள் ஆகியவை கொண்டு இயற்கை வளம்பெற்றது. ஆழ்கடல் மீன் பிடிப்பில் இந்தியாவிலே பெயர் பெற்றது.

மூலவர்: தேவி கன்னியாகுமரி.
உற்சவர்: தியாகசவுந்தரி, பாலசவுந்தரி.
தீர்த்தம்: பாபநாச தீர்த்தம்.

கோயில் 2500 ஆண்டுகள் பழமையானது. இராமாயணத்திலும், மகாபாரதத்திலும், தொல்காப்பியத்திலும், கன்னியாகுமரியைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. *52* சக்தி பீடங்களில் இது குமரி சக்தி பீடமாகும். மேலும் இங்கு குண்டலினி சக்தி இருப்பதாகக் கருதப்படுகிறது. மூன்று கடலும் சங்கமமாகும் இடத்திற்குச் சமீபத்தில் வீற்றிருக்கும் பிள்ளையாரை வணங்கிய பின்னர் தான் இங்கு வழிபாடு செய்தல் வேண்டும் என்றொரு முறை உண்டு.



விசாலமான சம வெளிப்பகுதியில், கடற் கரைக்குச் சமீபத்தில் நான்கு பக்கத்திலும் மதில்களால் சூழப்பட்ட ஆலயம். கருவறை உள்ளே மண்டபத்தின் நடுவே உள்ளது. இங்கு கன்னியாகுமரி தாயாகவே கிழக்குத் திசை நோக்கி அருள் பாலிக்கிறாள். நின்ற திருக்கோலம். மரகதச் சிலையாக, சிறந்த கலை நேர்த்தியுடன் எமை நோக்குகின்றாள். மாலை ஒன்றை வலது திருக்கையில் ஏந்திய படியும், இடது திருக்கரம் முழங்கால் மீதிருக்கும் இடது காலில் (தொடை) வைத்தபடியும் தவக்கோல நாயகியாகத் திகழ்கின்றாள். திருமுடி மீது இருக்கும் கிரீடத்தில் பிறைநிலா ஒளிர்கின்றது.

யோக சக்தியாகக் கருதப்படும் வைர மூக்குத்தி பேரொளி வீசிப் பள பளக்கிறது. இவ்வொளி பத்துக் கி.மீ தூரம் வரை தெரியும். முன்பு வெளிச்ச வீடு எனக் கருதி, கப்பல்கள், அணுகிச் சேதமடைந்ததால் கிழக்கு வாசல் எப்போதும், விசேட தினங்கள் தவிர்ந்த நாள்களில், மூடப்பட்டிருக்கும். கன்னியா குமரியை “மூக்குத்தி அம்மா” எனக் குறிப்பிடுவர்.

மக்கள் தெற்கு வாசல் வழியாகவே சென்று வழிபடுவர். பெண்களின் சபரிமலை எனக் கருதப்படும் கன்னியாகுமரியை சகஸ்ரநாமம் பாடி, அன்பு மிகுதியால், வழிபடும் அழகே அழகு. விநாயகர், முருகன், காலபைரவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற தெய்வங்களும் ஆலயத்தில் அமைந்துள்ளன.

இங்குள்ள நவராத்திரி மண்டபத்திலே கலை நிகழ்ச்சிகள் நடைபெறும். அன்னைக்குச் சிவப்புச் சேலை அணிவித்து, விளக்கேற்றி, மக்களுக்கு அன்னதானம் கொடுத்து, தமது திருமணம் நடைபெறவும் தாக்கங்கள், துயரங்கள் பிணிகள் தீரவும் மக்கள் வேண்டுவர்.

**வரலாறு:**
பகவதி அம்மனுக்கும் (பார்வதி தேவியின் அவதாரம்) சுசீந்திரத்தில் இருக்கும் தாணுமாலருக்கும் (சிவன்) திருமணம் நிச்சயிக்கப்பட்டது. திருமணதினம் சூரிய உதயத்தின் முன்னர் இருத்தல் வேண்டும் எனவும் குறிக்கப்பட்டது.. அந்த நன்னாளில் இரவோடு இரவாகத் தனது குழாமோடு தாணுமாலவர் விமரிசையாகச் சென்றார். நாரதர் சேவலாக மாறிக் கூவினார். இதனால் பொழுது விடிந்துவிட்டதெனக் கருதி, தாணுமாலவர் திரும்பினார்.

பாணாசுரன் எனும் அரக்கன் பலவரங்களைப் பெற்று தேவர்களைத் துன்புறுத்தி வந்தான். தேவர்களைக் காப்பாற்றவே நாரதர் இவ்வாறு செய்தார். அரக்கன் கன்னி ஒருத்தியாலேதான் தனது மரணம் ஏற்பட வேண்டும் என்ற வரம் பெற்றிருந்தான். ஈற்றில் பகவதி அவனை அழித்து கன்னியாகுமரியாக நின்று அருள்பாலிக்கின்றாள்.

வைகாசி மகோற்சவம், நவராத்திரி, விஜயதசமி ஆகியவை இத்தலத்தில் விசேடமாக கொண்டாடப்படுகின்றன.

திருவள்ளுவர்சிலை: தேசிய சின்னம்
"அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகுத்தி குறுகத் தறித்த குறள்"

- ஔவையார்

திருவள்ளுவர் கம்பீரமாகக் கடலில், கற்பாறை மீது நின்று காட்சியளிக்கின்றார். சுமார் பத்து ஆண்டுகளாகப் பலரின் கடின உழைப்பால் இச்சிலை உருவாகியது. 2001 ஆம் ஆண்டு தைமாதம் முதலாம் திகதி திறக்கப்பட்டது. கற் பாறைகளால் உருவாக்கப்பட்ட இச்சிலையின் எடை 7000 தொன் ஆகும். கடற்கரையிலிருந்து 1300 அடி தூரத்தில் இருக்கும் இச்சிலை 26-12-2004 நடந்த சுனாமியால் கன்னியாகுமரி நகரமே சேதப்பட்டு இருந்தும் தலை நிமிர்ந்து 30 அடி உயரமுள்ள பாறை மீது எவ்வித கேடுமின்றி நிற்கின்றது.



திருக்குறளையே எமக்கு இச்சிலை கற்பிக்கின்றது.

உயரம் - 133அடி- திருக்குறளின் மொத்த அதிகாரங்கள் பாறைமீது உள்ள பீடம் - 38 அடி அறத்துப்பாலில் 38 அதிகாரங்கள். பீடத்தின் மேல் 95 அடி - பொருட்பால் 70 + இன்பத்துப்பால் 25. வலதுகை மூன்று விரல்கள் மேல் நோக்குவது – அறம்+ பொருள் + இன்பம். இடது கையில் ஏடு 10 அடி நீளம். தலை கடல் மட்டத்திலிருந்து 200 அடி உயரத்தில் உளது. முகம் - 10 அடி உயரம், 3 அடி அகலம், கொண்டை - 3 அடி.

நாம் பெருமைப்படக்கூடிய உலகப் பொதுமறை நாயகனுக்கு மண்டபமும் உண்டு. அங்கு திருக்குறளின் ஒவ்வொரு அதிகாரத்திலுமிருந்து ஒரு குறள் வீதம் 133 குறள்கள் தமிழிலும், ஆங்கிலத்திலும் பொறிக்கப்பட்டுள்ளன.

சுவாமி விவேகானந்தர் சிலை: 12-01-1863 - 04-07-1902
உண்மைக்காக எதையும் துறக்கலாம் எதற்காகவும் உண்மையைத் துறக்கக் கூடாது.

- விவேகானந்தர்

இவரின் சிலை தலைசிறந்த தேசிய சின்னமாகும்.

கன்னியாகுமரி அன்னையை 25-12-1892 அன்று தரிசித்தார். பின்னர் கடலோரம் சென்று பாறை ஒன்றைக் கண்ணுற்று அதனால் ஈர்க்கப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கடலில் நீந்தி 500 மீட்டர் தொலைவில் உள்ள பெரிய பாறையை அடைந்தார். இப் பாறையின் மீது தான் முன்பு கன்னியாகுமரி தவமிருந்தார் எனக் கருதப்படுகிறது. நின்ற நிலையில் உணவு உறக்கமின்றி மூன்று நாள்கள் பாறை மீது தவம் செய்தார். இதனால் அவருக்கு இந்த உலகுக்குத் தான் உதவ வேண்டிய பணி பற்றி அறிவொளி உண்டாகியது. அமெரிக்காவின் சிகாகோ நகர் சென்று 1893 ஆம் ஆண்டு உலக சமயங்களின் மன்றத்தில் சொற்பொழிவு ஆற்றி உலகப்புகழ் பெற்றார்.

கல்கத்தாவில் காளியை கண்ட 39 வயதில் இறந்த இஞ்ஞானியின் நினைவாக 1970 ஆம் ஆண்டு அறிவொளி பெற்ற பாறையின் மீது விவேகானந்தர் மண்டபம் நிறுவப்பட்டது. வெண்கலச் சிலையாக, 14 மீட்டர் உயரமுள்ள கருங்கல் பீடத்தின் மீது 24 மீட்டர் நின்ற நிலை உருவமாகி சபா மண்டபத்தில் காட்சி யளிக்கின்றார்.

மகாத்மா காந்தி மண்டபம்.
*12-10-1869 - 30-01- 1948*



இந்தியா நாட்டின் தந்தை மகாத்மா காந்தியின் இறுதிச் சாம்பல் 12-02-1948 இல் கன்னியா குமரிக் கடலில் கரைக் கப்பட்டது. சாம்பல் கடற்கரையில் வைத்த இடத்தில் 1956 ஆம் ஆண்டு நினைவு மண்டபம் அமைக் கப்பட்டது. பிரவேசக் கட்டணம் இல்லை.
ஒரு சிறு பீடம் சாம்பல் வைத்த இடத்தில் உளது. இப்பீடத்தின் மீது ஒவ்வொரு வருடமும் அவரது பிறந்த தினத்தில் 02/10 சூரியனின் கதிர்கள் நண்பகல் (12 மணிக்கு) விழும்படி அமைக்கப்பட்டுள்ளது மிகச் சிறப்பான அம்சமாகும். மேலும் இம்மண்டபத்தில் உள்மயக்கூண்டு அவரது வயதைக்குறிக்க 79 மீட்டர் உயரத்தில் உளது.

கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை
*(27-07-1876 - 26-09-1954)*
குமரி மாவட்டத்தில் தேரூரில் பிறந்தவர். பக்திப்பாடல்கள் இலக்கிய வரலாறு, குழந்தைகளுக்காக பல்சுவைப் பாடல்களை பகுத்தவர். 1940 ஆம் ஆண்டு சென்னை மாநில தமிழ் சங்கம் கவிமணி எனும் பட்டத்தை கொடுத்து இவரது சேவையைக் கௌரவித்தது.

சூரியன்:

காலையில் எமை நாடிவரும், நாம் காணும் முதற்கடவுள். உதிக்கின்ற செங்கதிரைக் காணவும், அத்தமனத்தைப் பார்க்கவும் பலரும், பாடசாலை மாணவரும் கூடிப் பாடி பரவசமாக வரவேற்பர். இதற்கென ஒரு இடமுண்டு. பலரும் இக்காட்சியைக் காண படையெடுத்து வருவர்.

“மூன்று கடல்கள் இணையும் இடம் இவ்வுலகில் இங்கேயன்றி எங்கேயும் இல்லை. புனித நீரான கடல் நீரும் குமரி அம்மன் போன்று கன்னிப் பெண்ணாக, கப்பல் வராத துறைமுகமாக இருக்கின்றது”

கன்னியாகுமரிக்கு நேரடியாக சென்னையில் இருந்து புகையிரத சேவை உண்டு. புகையிரத நிலையத்திலிருந்து 1.3 கி.மீ. சுசீந்திரத்தில் இருந்து 13 கி.மீ தூரத்தில் உள்ளது. சிறந்த பேருந்து வசதிகள் தாராளமாக உள்ளன. சமீபத்தில் உள்ள விமான நிலையம் திருவனந்தபுரம்.

**Dr க கதிர்காமநாதன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவனும் பார்வதியும் ஆடிய சதுரங்கம் (Chess)

44ஆவது உலக சதுரங்க ஒலிம்பியாட் (CHESS OLYMPIAD) *28-07-2022* அன்று சென்னை நேரு அரங்கத்தில் தமிழக முதல்வர் திரு மு.க.ஸ்ராலின் முன்னிலையில் இந்தியப் பிரதமர் திரு மோடி அவர்களால் தொடக்கி வைக்கப்பட்டது. இப்போட்டி 09-08-2022 இல் நிறைவடைந்தது. செஸ் போட்டிகளில் பல நாடுகளும், பல விளையாட்டு வீரர்களும் பங்குபற்றிச் சிறப்பித்தார்கள். வீரர்கள் மகா பலிபுரம் செரிடன் ஹோட்டலில் தங்க வைக்கப்பட்டு, போட்டிகளும் அங்கேயே நடைபெற்றன.

பிரதமர் மோடி அவர்கள் தன் உரையில், தமிழ் நாட்டில் போட்டி போட்டுச் சதுரங்கம் ஆடிய சிவனும், தேவியும் உறைந்து அருள்பாலிக்கும் ஓர் ஆலயத்தைப் பற்றிக் கூறி மக்களுக்கு ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தினார். இந்து தர்மத்தையும், எமது ஆலயங்களையும் பெருமைப்படுத்தினார்.

திருவாரூர் மாவட்டத்தில், நீடாமங்கலம் அருகே உள்ள திருப்பூவனூரில், சுயம்பு லிங்கமாக தோன்றி அருள் பாலிக்கும் சதுரங்கவல்லப நாதர் (ஈஸ்வரர்) ஆலயமாகும். பதினைந்து நூற்றாண்டுகள் பழமையான ஆலயம் என்று சொல்லப்படுகிறது. அக்காலத்தில் இங்கு பல நந்தவனங்களும் அழகிய பூக்களும் காணப்பட்டதால், இறைவன் புஷ்பவனநாதர் என்று குறிக்கப்பட்டார். இறைவி கற்பகவல்லி. பின்நாளில் பார்வதிதேவியே இராஜரா ஜேஸ்வரியாக இன்னொரு அம்மன் சந்நிதியில் அமர்ந்து அருள் பாலிக்கிறார்.

இனி இறைவன், இறைவியின் சதுரங்க விளையாட்டைப் பார்ப்போம். தென் பாண்டி நாட்டின் மன்னன் வசுசேனன், அரசி காந்திமதி புத்திரசோகத்தால் நெல்லையப்பரையும், காந்திமதி அன்னையையும் வேண்டித் தொழுதபோது, சிவன், அன்னை பார்வதியை பூலோகத்தில் அவதாரம் எடுக்கச் செய்தார். அரசனும் அரசியும் தாமிரபரணி ஆற்றிலே நீராடிக்கொண்டிருந்த போது, தாமரை வடிவில் அவர்கள் கைகளில் சங்கொன்று கிடைத்தது. உடனே சங்கானது அழகிய இறைபொலிவுடன் கூடிய குழந்தையாகத் தோன்றியது. இக்குழந்தை இறைவனின் பேரருள் என எண்ணி வணங்கி, துதித்து அன்புடனும் ஆசையுடனும் குழந்தைக்கு இராஜராஜேஸ்வரி எனப் பெயரிட்டு கண்ணும் கருத்துமாக வளர்த்தனர். சப்தமாதா சாமுண்டியை, இறைவன் பூலோகத்திற்கு மன்னனின் அரண்மனைக்கு அனுப்பி, இராஜ ராஜேஸ்வரிக்கு சகல கல்வி, கலைகள் எல்லாவற்றுடனும் சதுரங்க விளையாட்டையும் கற்பிக்கப் பணித்தார். அவரும் எல்லாவற்றிலும் சிறப்பாக தேர்ச்சி பெற்றார்.

## அமிர்தா தியாகலிங்கம்

அரசனும் சதுரங்க விளையாட்டில் இளவரசியை வெல்பவர்தான், திருமணம் செய்ய முடியும் என அறிவித்தார். பலரும் வந்து தோல்வியடைந்தனர். ஆண்டுகளும் நகர்ந்தன. அரசனுக்கும் மகளின் திருமணத்தையிட்டுப் பயம் தொற்றியது. இதனால் ஆலயம் தோறும் சென்று வழிபட்டு வந்து கொண்டிருந்தனர். அவர்கள் திருப்பூவனூர் ஆலயத்தைத் தரிசித்துத் திரும்புகையில் முதியவர் வடிவில் வந்த இறைவன், அரசனை வழி மறித்து தான் இளவரசியுடன் சதுரங்கம் விளையாட வேண்டும் எனக் கேட்க, அரசனும் இந்த முதியவரால் இளவரசியை வெல்ல முடியாது என எண்ணி உடன்பட்டார். அரசன் எண்ணியதற்கு எதிராக முதியவர் சதுரங்கத்தில் வெற்றியடைந்தார். இதனை சற்றும் எதிர்பாராத அரசன், முதியவர் தன் மகளை மணம் முடிக்கப் போகிறாரே என எண்ணி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனிடம் இது என்ன சோதனை என வேண்ட முதியவர் தன் தோற்றத்தை களைய, இறைவன் சதுரங்கவல்லபநாதர் ஆனார்.

இராஜராஜேஸ்வரி பார்வதி தேவியானார். அரசனும் அரசியும் மிக மகிழ்ந்து இத்திருமணத்தில் மன மகிழ்ச்சியும், மன நிறைவும் அடைந்தனர். இந்த நிகழ்வின் பின் திருப்பூவனநாதர் ஸ்ரீ சதுரங்கவல்லபநாதர் என அழைக்கப்பட்டார். அன்னை பார்வதியும் தனிச் சந்நிதியில் இராஜராஜேஸ்வரியாகக் கோயில் கொண்டார். சதுரங்க ஆட்டம் விஜயதசமி நாளில் நடைபெற்றதாகக் கருதப்படுகிறது.

சோழநாட்டில் உள்ள இத்தலத்து ஈசனை அப்பர் பெருமான் ஐந்தாம் திருமுறையில் பாடியுள்ளார். "பூவனூர்ப்புனி தன்திரு நாமத்தான்" என்று தொடங்கும் பதிகத்தில் நாலாம் தேவாரத்தின் இறுதியில் "பூவ னூர்புகு வார்வினை போகுமே" என்றும், ஐந்தாம் பாடல் முடிவில் பூவனூரை குறிப்பிட்டாலே வல்வினை மாயுமே (நீங்கும்) என்றும் போற்றியுள்ளார்.

இங்கு இரு அம்மன் சந்நிதிகளோடு, கூட வடக்கு நோக்கி சூலத்துடன் இருந்த நிலையில், கருணை அருள் பொங்கும் அன்னை ஸ்ரீசாமுண்டீஸ்வரியும் தனிச் சந்நிதியில் இருந்து பக்தர்களுக்கு துயர்துடைப்பது சிறப்பு. மைசூர் சாமுண்டீஸ்வரி போல் இங்கு கோயில் கொண்டிருப்பதும் ஒரு வரமாகும். தமிழ் நாட்டில் சாமுண்டீஸ்வரி கோயில் கொண்டிருப்பது இங்கு மட்டும் தான் எனவும் சொல்லப்படுகிறது.அன்னை சாமுண்டீஸ்வரிக்கு சித்திரை மாத அமாவாசைக்கு மறுநாள் முதல் பத்து நாள்கள் திருவிழாக்கள் நடைபெறும். அன்னை பார்வதியும் உட்பட மூன்று தேவிகள் கோயில் கொண்டுள்ளதால் இங்கு நவராத்திரி விழாவும் சிறப்பாக கொண்டாடப்படும்.

சதுரங்கம் 8×8 என 64 கட்டங்களை கொண்டதாகும். இது சுவாமியின் 64 வடிவங்கள், 64 நாட்டியநிலைகள், ஆய கலைகள் 64 என்பதனைக் காட்டுகின்றது.

இங்கு இறைவனுக்கு விழாக்காலங்களில், முன்பு 64 பூக்கள், 64 காய்கள், 64 பழங்கள், 64 மூலிகைகள், தானியம், திரவியம், வஸ்துக்களால் இறைவனைப் பூசித்தனர். சிவனும், பார்வதியும் மானுடவடிவில் தோன்றி திருமணம் செய்து ஒன்று சேர எழுந்தருளிய தலம் என்பதால் தேவர்கள், சித்தர்கள், மகரிஷிகள், மகான்கள், முனிவர்கள் வந்து சேவித்தனர் என்றும் சொல்லப்படுகிறது.

தெய்வத்திருமணம் நடைபெற்ற தலமாதலால் இங்கு வழிபட, திருமண பாக்கியம், புத்திர பாக்கியம் அருளும் தலமாகவும் பார்க்கப் படுகிறது.

இங்கு அகத்திய பெருமானை மூலிகை வைத்திய, ஆசானகக் கருதி வழிபட்டு, அன்னை சாமுண்டேஸ்வரி சந்நிதி முன் விலங்குக் கடிகளுக்கும், விஷ ஜந்து கடிகளுக்கும் கோயிலின் முன் உள்ள பாற்குளம் தீர்த்தத்தில் மூழ்கி நீராடி, மூலிகை வேர் ரட்சையை கையில் கட்டி, நோய் நீங்கப் பெறுகின்றனர்.

முன்னொரு காலத்தில் ஆயிரமாயிரம் அபூர்வ மூலிகை செடிகள், பூமரங்கள், செடிகொடிகள் இருந்த காரணத்தால், இப்போதும் இத்தலம் வேத, யோக சித்திகள் நிறைந்ததாக கருதி, சிலர் இவ்வூருக்கு வந்து தங்கித் தரிசித்துச் செல்கின்றனர். ஆஸ்த்மா நோயாளிகள் வழிபட்டு நலம் பெறுவதாக கூறப்படுகிறது.

இனி, கோயிலை பார்ப்போம்.

ஏழு கலசங்களை கொண்ட ஐந்து நிலைக் கோபுரம். தலவிருட்சம் பலா. முன்பு 18 தீர்த்தங்கள் இருந்ததாகவும், இப்போ பாற்குளம் (க்ஷீர புஷ்கரணி), பாம்பணியாறு, கிருஷ்ண குஷ்டஹர தீர்த்தம் (கருங்குட்டம் நீக்கியது) என 3 தீர்த்தங்கள்தான் இருக்கின்றன. கோயிலின் உள்ளே சென்றால் கொடிமரம், பலிபீடம், நந்தி ஆகியவை இருக்கின்றன. சிவனினதும், மூன்று அம்மன் சந்நிதிகளினதும் கருவறைகளின் மேல் விமானங்கள் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாக் கோயில்களிலும் உள்ளது போல் விநாயகர், சுப்பிரமணியர், வள்ளி தெய்வானை, லட்சுமி, நாராயணர், தட்சணாமூர்த்தி, காசி விஸ்வநாதர், நால்வர், அகத்தியர், பூர்ணபுஸ்கலையுடன் ஐயனார், சாஸ்தா, பசுபதீஸ்வரர், மகாலட்சுமி என சந்நிதிகள் உண்டு. விஷ்ணு, பிரம்மா, இந்திரன், விநாயகர், சுகர், அகத்தியர் என பலரும் வந்து பூசை செய்து வணங்கிய தலம் எனப்படுகிறது. இராஜராஜேஸ்வரி அம்மனுக்கு 12 வாரம் தொடர்ந்து செவ்வாய் கிழமைகளில், மாலை சாற்றி மூன்று நெய் விளக்குப் போட்டு வழிபட, திருமண பாக்கியம் கைகூடும் என்பர்.

சாமுண்டேஸ்வரி அம்மனுக்கு நடைபெறும் பௌர்ணமி பூசைகளில் 27 தீபம் போட்டு, சந்நிதியை 27 முறை சுற்றி, 9 வாரங்கள் வழிபட்டால், வியாதிகள், குடும்ப பிரசினைகள், கருத்து வேறுபாடுகள், எதிர்மறைச் சக்திகள் போன்ற எல்லா பிரசினைகளையும் தீர்க்கும் அன்னையாகப் பார்க்கப்படுகிறாள்.

சித்திரை வருடப்பிறப்பு, வைகாசி விசாகம், ஆனி உத்தரம், ஆடிப்பூரம், ஆவணிமூலம், ஓணம், சதுர்த்தி, புரட்டாதி நவராத்திரி, கார்த்திகை தீபம், மார்கழி திருவாதிரை, தைபூசம், மாசி சிவராத்திரி, மகம், பங்குனி உத்திரம் என மாதம் தோறும் விழாக்களும், வழிபாடுகளும் நடைபெறுகின்றன.


தேவாரப்பாடல் பெற்ற தலங்கள் 276 இல், இது 166வது. காவிரித் தென்கரை ஆலயங்களில் 103 ஆவதாகும். இங்கு 1942 இல் காஞ்சிப் பெரியவர் 45 நாள்கள் தங்கி அதிருத்திரகோமம் செய்தார்கள். புதியதாக மிகப் பெரிய அளவில் திருப்பணிகள் செய்து முடிக்கப்பெற்று 08-06-2017 இல் விழா நடைபெற்றது.

உமாபதி சிவாசாரியார் சிவஷேத்திர சிவநாம கலிவெண்பாவில் "பூவனூர் கற்பகத்தைப் புல்லுகின்ற புட்பவனத் தேவனே வேதசிகாமணியே" என இறைவன் இறைவியை விளித்து குறிப்பிட்டுள்ளார். அத்துடன் உமாபதி சிவாசாரியார் திருப்பதிகக் கோவையிலும் பூவனூர் பற்றி மேலும் குறிப்பிட்டுள்ளார். இராமலிங்க அடிகளாரால் (வள்ளளார்) திருவருட்பாவும் புனையப்பட்ட தலம் இது.

சேக்கிழார் பெரியபுராணத்தில் சம்பந்தப் பெருமானின் பதிகத்தில்
"பழுதில் சீர்திருப்பருதினியமமும் பணிந்தங்
கெழுது மாமறை யாம்பதி கத்திசை போற்றி
முழுது மானவர் கோயில்கள் வணங்கியே முறைமை
வழுவி லார்திருப் பூவனூர் வணங்கி வந்தனைந்து"
என்று பாடியதால் சம்பந்தப் பெருமானும் வந்து வணங்கியதாக நம்பப்படுகிறது.


கோயிலின் வழித்தடம்:
தஞ்சாவூர் நாகபட்டினம் தேசிய நெடுஞ்சாலையில் நீடாமங்கலத்தில் இருந்து மன்னார்குடி செல்லும் பாதையில் திருப்பூவனூர் உள்ளது. நீடாமங்கலத்திலிருந்து 3 கி.மீ , மன்னார் குடியில் இருந்து 9 கி.மீ , திருவாரூரில் இருந்து 33 கி.மீ தூரத்தில் உள்ளது பூவனூர்.

பூவனூர் கோயில் முகவரி:
நிர்வாக அதிகாரி
அருள்மிகு சதுரங்கவல்லபநாத சுவாமி திருக்கோயில்
பூவனூர் 612803,
நீடாமங்கலம் தாலுகா,
திருவாரூர் மாவட்டம், தமிழ்நாடு,




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Bringing "Kanaka Sabha" to United Kingdom



"It was a hot summer day in 1988. My wife and I with our two children Vijayalakshmi and Senthuran were in Cambridge and we took a walk in the Cambridge Market. There, we saw a Nadarajar statue in Gold colour on the pavement being placed for sale by a market trader. The statue was shining in the afternoon Sun and my wife Vahsuky became very upset that this Nadarajar statue was being traded on the pavement of a busy road. The trader was an English gentleman and I asked him whether he was aware of the significance of the statue. His answer was a definite "No" and he said as far as he was concerned this statue is an art object. He said he was happy to get rid of this Statue for a British pound [£1]. We were so thrilled that we paid the money and so excited to own a Nadarajar Statue"

***Rattinam Pathmanathan, Vice Patron/ Donor, Saiva Munnetta Sangam {U.K}***

மேலே உள்ள பதிவு 2008இல், சிதம்பரேஸ்வரர் கும்பாபிஷேகம் நடந்தபோது, 58ஆவது கலசம் இதழில் (பக்கம் 7) அமரர் திரு பத்மநாதன் அவர்கள் எழுதிய கோயில் வரலாற்றில் உள்ள ஒரு பகுதி. இன்று நாம் வழிபட, சைவ முன்னேற்றச் சங்கத்தில் அமைந்துள்ள சிதம்பரேசுவரர் கோயில் உருவாவதற்கு வித்திட்டவர் அவர். பின்னர் பலரின் நிதி உதவியால் இன்று அந்தக் கோயில் அழகாக உருவாகி, பலருக்கும் அருள் பாலித்துக்கொண்டிருக்கிறது.

சைவ முன்னேற்றச் சங்கம், ஐக்கிய இராய்ச்சியத்தில், 1977 இல் தொடங்கிய நாளிலிருந்து தனது இறுதி மூச்சுவரை உறுப்பினராக இருந்து உழைத்தவர் திரு பத்மநாதன் அவர்கள். சங்கத்தின் பணிகளுடன் தனது குடும்பத்தையே இணைத்துக்கொண்டவர். இல்லந்தோறும் வழிபாடுகள் நிகழ்ந்துவரும் நாள்களில், தீபாராதனையை அவர் செய்வார். அவரின் மனைவியார் கூட்டுவழிபாட்டை நிகழ்த்துவார்.

முகத்தில் நிரந்தரமான புன்னகை, அனைவரையும் அன்புடன் உபசரிக்கும் பண்பு, எதையும் சரியாகச் செய்யவேண்டும் என்ற முனைப்பு, தெரியாதவற்றைத் தெரிந்தவர்களிடம் கேட்டு அறிதல் ஆகியவை அவரின் சொத்துக்களிற் சில. சரியானவற்றைப் பாராட்டவும் தவறுகளைச் சுட்டிக்காட்டவும் அவர் என்றுமே தயங்கியதில்லை; தவறியதுமில்லை.

திரு பத்மநாதன் அவர்கள் சைவ முன்னேற்றச்சங்கத்தில் தலைவராக, சமயச் செயலாளராக, துணைத் தலைவராக, காப்பாளராக, செயற்குழு உறுப்பினராக வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு பதவிகளில் இருந்து பெருந்தொண்டு ஆற்றியவர். சங்கப் பணிகளுக்கு பெரிய அளவில் நிதியுதவி பெற்றுக்கொடுத்தவர். நிறைவாக, சங்கத்தின் போஷகராக இருந்தார்.

திரு பத்மநாதன் அவர்கள் "கலசம்" இதழின் தீவிர வாசகர். ஒவ்வொரு இதழும் வந்தவுடன் படித்துவிட்டு, பாராட்டுவார்; பிழைகளைச் சுட்டிக்காட்டுவார்; சந்தேகங்களைக் கேட்டுத் தெளிந்துகொள்வார். இன்று அவர் எம்மிடை இல்லை. அதுவும் ஆடல்வல்லானின் திருவருளே! அவரின் பிள்ளைகள் திரு செந்தூரன் குடும்பத்தினருக்கும் (UK) திருமதி விஜயலட்சுமி குடும்பத்தினருக்கும் (Australia) சகோதரர்கள் குடும்பத்தினருக்கும் "கலசம்" தனது ஆழ்ந்த அநுதாபத்தைத் தெரிவிக்கின்றது.

**- கலசம் குழுவினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Satash Community Care






உடற்குறைபாடு அல்லது மனநலக் குறைவு காரணமாக உங்களுக்கோ அல்லது உறவினருக்கோ உதவி தேவைப்படின் பல ஆண்டுகள் அனுபவமும் அங்கீகாரமும் பெற்ற எங்கள் சேவையை நாடுங்கள். அவரவர் தேவைகளுக்கேற்பப் பராமரிப்பைத் திட்டமிட்டு வகுத்துச் செயற்படுத்துவதில் எமது நிறுவனம் பாராட்டும் பரிசும் பெற்றது.

மேலதிக விவரம் அறிய எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.

**Orchid Bungalow**
51 Mollands Lane,
South Ockendon RM15 6DH
**Adult Services 01708 850555**

**Jasmine Bungalow**
53 Mollands Lane,
South Ockendon RM15 6DH
**Children Services 01708 851189**

109-111 Molands Lane,
South Ockenden RM15 6DJ
**Adult Services 01708 856592**

**Trinity Community Centre**
East Avenue, London E12 6SG
**Domicilary Care 0203 200 1047**

www.satashcommunitycare.com

Letchmi Loganathan
07957 869620
letchmi@satashcommunitycare.com

Logan Loganathan
07956 377298
logan@satashcommunitycare.com


Sathian Loganathan
07949 755104
sathian@satashcommunitycare.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவயோகம்
SIVAYOGAM
(Charity Reg No: 1050398 Since: 1995)



இந்து கலாசார மையம்

அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மன் திருக்கோயில்

128, Aurelia Road, Croydon CRO 3BF. Tel: 020 8767 9881









சைவப் பெருமக்கள் அனைவருக்கும் வணக்கம். உங்கள் அனைவருக்கும் அம்பாளின் அருள் கிடைக்க எல்லாம் வல்ல இலண்டன் அருள்மிகு முத்துமாரி அம்மனைப் பிரார்த்திக்கின்றோம். அம்பாளின் அருளாலும், அடியார்களின் நன்கொடைகளாலும் அம்பாளுக்கு ஆலயம் அமைப்பதற்கான இடம் "சிவயோகம்" அறக்கட்டளைக்குச் சொந்தமாக வாங்கப்பட்டுள்ளபோதிலும் பணப் பற்றாக்குறை காரணமாக ஆலயம் அமைக்கும் பணி தாமதமாகிறது. அம்பாளுக்கு ஆலயம் அமைக்கும் வேலையைத் துரிதப்படுத்துவதற்கு அடியார்கள் தங்களால் ஆன உதவியைச் செய்யுமாறு தாழ்மையாகக் கேட்டுக்கொள்கின்றோம். தங்கள் நன்கொடையை ஆலயத்தில் நேரடியாகப் பணமாகவோ அல்லது காசோலையாகவோ அல்லது வங்கியூடாகவோ வழங்கலாம்.

வங்கிக் கணக்கு விபரம் **Name: SIVAYOGAM BUILDING FUND | Account No: 20057541 | Sort Code:- 20 21 78| Bank: BARCLAYS**

நன்றி

ஆலய நிர்வாகத்தினர்

Muththumari Amman Temple Sivayogam



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"Ammanai Saran Adainthal Athika Varam Peralam"

**SHRI KANAGA THURKKAI AMMAM (HINDU) TEMPLE TRUST**


**Founded on 10 - 08 - 1991 Charity No: 1014409**

5 CHAPEL ROAD LONDON W13 9AE | TEL: TEL: 020 8810 0835/020 8840 0485

www.ammanealing.org | Email: info@ammanealing.org

# புத்தாண்டில் உதயமாகிறது

# தியான மண்டபம்



அம்பிகையின் திருவருளினால்
நீண்டகால முயற்சியின் பயனாய்
கைகூடிய இத் தெய்வீகத் திருப்பணியில்
உங்களின் கரங்களையும்
இணைய வேண்டி நிற்கின்றோம்.
இத் தியான மண்டபத்தில்

**Elder's Day Centre**

ஆரம்பிக்கப்பட்டு
தியானப் பயிற்சியுடன் கூடிய
அனைத்து உதவிகளும்
நிபுணத்துவம் மிக்கவர்களால்
அளிக்கப்படும்.
இப் புனிதப் பணியில்
கைகோர்க்கும் அடியவர்களில்

**£1000 பவுண்களிற்கு மேல்**

அன்பளிப்புச் செய்பவர்களின் பெயர்கள் மண்டப சுவர்களில் பொறிக்கப்படும்

**Please DONATE to our MILESTONE PROJECT**

# "MEDITATION HALL"
# (ELDER'S DAY CENTRE)

**Bank Details: SKTA Temple Trust**

**LLOYDS BANK | SOFT CODE: 30-98-91 | ACCOUNT NO: 02717646**

அன்னையின் பணியில் இணைந்திடுங்கள் அவள் அருளைப் பெற்றிடுங்கள்

**Please donate as much as you can!**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சைவ முன்னேற்றச் சங்கம்

# அருள்மிகு ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் சந்நிதி

# விசேட நாள்கள்

## ஒக்டோபர் (24-10-2022) தொடக்கம் ஜனவரி (14-01-2023) வரை

| | | |
|---|---|---|
| *24.10.2022* | திங்கள் | கேதாரகௌரி விரதம் நிறைவு, தீபாவளி |
| *26.10.2022* | புதன் | கந்தசஷ்டி விரதாரம்பம் |
| *30.10.2022* | ஞாயிறு | கந்தசஷ்டி விரதம் நிறைவு |
| *31.10.2022* | திங்கள் | முருகன் திருக்கல்யாணம் |
| *05.11.2022* | சனி | பிரதோஷம் |
| *21.11.2022* | திங்கள் | பிரதோஷம், சோமவாரம் |
| *05.12.2022* | திங்கள் | பிரதோஷம், சோமவாரம் |
| *08.12.2022* | வியாழன் | விநாயக விரதம் ஆரம்பம் |
| *21.12.2022* | புதன் | பிரதோஷம் |
| *27.12.2022* | செவ்வாய் | திருவாதிரை உற்சவ கணபதி ஹோமம் |
| *28.12.2022* | புதன் | திருவெம்பாவை உற்சவம் ஆரம்பம் |
| *02.01.2023* | திங்கள் | வைகுண்ட ஏகாதசி |
| *05.01.2023* | வியாழன் | தேர் உற்சவம் |
| *06.01.2023* | வெள்ளி | நடேசர் அபிஷேகம், ஆருத்திரா தரிசனம் |
| *14.01.2023* | சனி | தைப்பொங்கல் |

பிரதோஷ காலத்தில் ஆலயத்தில் விசேஷ பூசை, வழிபாடுகள் நடைபெறுகின்றன.

கோயில் திறந்திருக்கும் நேரம்:

காலை: *8.30* மணிமுதல் *13.00* மணிவரை

மாலை: *5.00* மணிமுதல் *9.00* மணிவரை

ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிதம்பரேசுவரப் பெருமானை வழிபட்டுத் திருவருள் பெற்று உய்யுமாறு அடியார்களைப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவெம்பாவை

திரு க. செல்வரத்னம்

சங்க காலம் தொட்டே பாவைப்பாடல்கள் இருந்து வந்துள்ளன. தொல்காப்பிய உரையாசிரியர்கள் சிறுபாட்டு, பாவைப்பாட்டு எனப் பயன்படுத்தி வந்துள்ளனர். பரிபாடல், கலித்தொகை, நற்றிணை, ஐங்குறுநூறு ஆகிய நூல்களிலும் இவை இடம் பெற்றுள்ளன.

இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே மார்கழி பௌர்ணமி நாள் முதல் திருவெம்பாவை எனக் குறிப்பிடாமல், தை நீராடல் என வழங்கி வந்துள்ளது. திருப்பாவை திருவெம்பாவை சமணர் எழுதிய பாடல்கள் உட்பட நாலைந்து திருவெம்பாவை பாடல்கள் இருந்திருக்க வேண்டும்.

மார்கழி மாதம் திருவாதிரை நாளன்று இறைவனது பத்து நாள் தரிசன விழா நிறைவாகிறது. எம் பெருமான் மாணிக்க வாசகரைப் பார்த்து "பாவை பாடிய வாயால் கோவை பாடுக" என்றாராம். பாவை என்பது திருவெம்பாவை. இதில் இருந்து திருவெம்பாவையின் சிறப்பை நாம் மதிப்பிடலாம்.

இருபது திருவெம்பாவைப் பாடல்களை மணிவாசகர் பாடியுள்ளார். ஒவ்வொரு பாடலின் இறுதிச் சொல் "எம்பாவாய்" என்றுள்ளது. மங்கலமாகக் காட்டுவதற்கே இச்சொல் அமைக்கப்பட்டுள்ளது. .எனவே அதுவே திருவெம்பாவை எனும் தலைப்பாக அமைக்கப்பட்டுள்ளது. இது திருவாசகத்தின் ஒருபகுதியே ஆகும்.

வயதிற் குறைந்த இளம் பெண் குழந்தைகள் அதிகாலை எழுந்து, ஒவ்வொருவராக எழுப்பி நீராடி இறைவனிடம் அருள் வேண்டுபவையாக இப்பாடல்கள் அமைந்துள்ளன. அவர்களது வேண்டுதலை மூவகைப்படுத்தலாம். நாடு நல்ல மழை பெறவேண்டும்; வீடு நல்ல கணவர்மாரைப் பெற வேண்டும் என்பவை அவற்றுள் இரண்டு. பொது நோக்காக நாட்டுக்கு நல்ல மழை பெய்யவேண்டும் என்றும், சுய நோக்காகத் தமக்கு நல்ல கணவர் வாய்க்கப்பெறவேண்டும் என்றும் வேண்டி நிற்பர். மூன்றாவது வேண்டுதல் ஆன்மாக்களுக்கு இறைவன் வேண்டும் என்பது. பக்தியில் இறைவனது பெயரை உச்சரிப்பது முக்கியமாகும்; உணர்ந்து உருகுவதும் பண்பாகும்.

மாணிக்க வாசகரது முதற் பாடலில், "ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதியை நாம் பாடுவது உனது காதில் விழவில்லையா? அல்லது தொடர்ந்து தூங்குகிறாயோ? ஆனால் வேறொருத்தி விம்மி விம்மி அழுது புரண்டு மயங்கிக் கிடக்கிறாளே. சிறு குழந்தைகள் நித்திரை கொள்வதால் வளருவார்கள் அது போல நீயும் நித்திரையில் வளர்கிறாயோ? உனது காது கூரிய செவி அல்லவா? இருந்தும் எப்படித் தூங்குகிறாய்?" என்கிறார்.
"அருட்பெருஞ்சோதி தனிப் பெருங்கருணை" என்ற வள்ளலார் சிந்தனையை உருவாக வழி அமைத்துக் கொடுத்தது மணிவாசகர் என்பது மறுப்பதற்கில்லை.

இரண்டாம் பாடலில், "பரஞ்சோதியின்மேல் நேசங் கொண்டவள் எனச் சொன்னாயே, ஆனால் படுக்கை மேல் நேசம் வைத்திருக்கிறாயே" எனத் தோழி கேட்டதும், "சீ,சீ, இப்படியாக விளையாட்டுக்காகத் தானே ஏசுகிறீர்கள்" என்றதும், தோழிமார், "விண்ணோர்கள் ஏத்தும் இறைவன் நம்மைக் காத்தருள வருகின்றான்" என்று கூறி அழைத்துக் கொண்டு செல்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாம் பாடலில், முத்து வெண்மையானது. குளிர்ச்சியானது அது போன்று படுத்திருக்கும் தோழியின் பற்களும் வெண்மையானவை. "நீ எழுந்து தந்தை, ஆனந்தன், அமிர்தன் எனப் பேசுவாய் ஆனால் இன்னும் தூங்குகிறாயே" என்றதும், விடையாக அவள், "நீங்கள் நீண்ட நாள்களாக அடிமை கொண்டு பக்தி செய்பவர்கள், அநுபவம் கொண்டவர்கள், நாங்கள் புதியவர்கள். எமது குறைபாடுகளைப் பொருட்படுத்தாது, எங்களை உங்களுடன் சேர்த்துக் கொண்டால் ஏதாவது தீங்கு விளையுமோ?" என்கிறாள்.

(சைவ அடியவரது பத்துச் சிறந்த நற்குணங்கள்: 1. திருநீறு உருத்திராட்சம் தரித்தல் 2. குரு வழிபாடு 3. தேவாரப்பாடல்கள் பாராயணம் செய்தல் 4. மந்திரம் உச்சரித்தல் 5. பக்திப்பாடல் பாடல் 6. சிவதர்மம் செய்தல் 7. சிவன் செய்திகளை அறிதல் 8. சிவ ஆலயங்களைப் பாதுகாத்தல் 9. தொண்டர்களுக்கு அமுது அளித்து உண்ணுதல் 10. தொண்டருக்குத் தொண்டராயிருத்தல்)

தோழியர் தம் மற்றைய தோழியரை எழுப்பிக் கொண்டு போகும் போது, நாலாம் பாடலில், படுக்கையில் கிடந்த ஒருத்தியை "உனக்கு இன்னும் விடியவில்லையா?" என்று கேட்க, வந்தவர்களிடம், "விடிந்து விட்டதா? கிளிபோன்று பேசுவோர் எல்லாரும் வந்து விட்டார்களா?" என்று கேட்டதும், "நாம் எண்ணித்தொகையைக் கூற நேரமில்லை" என்பதை செவிசாய்க்காது திரும்பவும் உறங்குபவளைப் பார்த்து, "தூங்கிக் காலத்தைப் போக்காதே! அமிர்தமாய் இருப்பவனை, வேதப் பெரும் பொருளை, கண்ணுக்கு இனியவனை நீயே புகழ்ந்து பாடி உருகுவாயாக! நீயே வந்து எண்ணிப்பார்" என்கிறாள் வந்தவள். "தொகை குறைவாக இருந்தால் நீ திரும்பவும் போய்த் தூங்கலாம். கூறுவதை எண்ணிப்பார்" என்று உரையாடல் போலக் கன்னிப் பெண்களின் இலட்சிய எண்ணங்களை மாணிக்க வாசகர் அவர்களின் வாயினால் கொண்டுவருதல் போல அழகாக வெளிக் கொண்டு வந்துள்ளார்.

"திருமாலாலும் பிரமனாலும் அறியமுடியாத அந்த அண்ணாமலையானை, மானுடர் இலகுவாக அறியமுடியுமோ? மண்ணுலகமும் விண்ணுலகமும் அவனை அறிய முடியாது. தேன் சொட்டுவது போல இனிமையாகப் பேசுகிறாய்! அவரை இலகுவாக அறிந்திடலாம் என எண்ணாதே, நாமோ சிவனே! சிவனே! என உரக்கக் கத்துகிறோம். நீயோ இன்னும் உணர்கிறாய் இல்லை. சிவதத்துவத்தை எண்ணிப்பார்" என்கின்றனர் தோழியர்.

ஐந்தாம் பாடல் மூலம், தூங்கிக் கிடப்பவளின் தமோகுணத்தைப் போக்க முயல்கின்றனர்.

ஆறாம் பாடலில், சலிப்படைந்த பெண்கள், "பெண்ணே! நேற்று, நாளை வந்து உங்களை நானே வந்து எழுப்புவேன் என்று சொன்னாயே! சொன்ன சொல் எந்தத் திசையாகக் காற்றில் பறக்கவிட்டாய்? இன்னும் உனக்கு விடியவில்லையா? விண்ணுலகத்தவரும் மண்ணுலகத்தவரும் மற்ற உலகத்தவரும் அறிய முடியாத மகாதேவன் வலிய வந்து நம்மை ஆட்கொண்டுள்ளான். அவனது திருவடியை நாம் பாடி வருகிறோம். வாய்திறந்து பேச மாட்டாயா? எங்களை முன்னிட்டாவது இறைவனைப் புகழ்ந்து பாடு!" என்கின்றனர்.

ஏழாம் பாடலில், "தேவர்களாலும் நினைக்கமுடியாத பெருமானும், ஒப்புயர்வு அற்றவனும், பெருஞ்சிறப்பு உடையவனும் ஆகிய சிவபெருமானைப் பற்றி சின்னங்கள் ஒலிகேட்டதும், சிவ சிவ என்பாயே! அரசன், அமுதன் என்றெல்லாம் சொல்லக் கேட்டவுடன் தீயிலிட்ட மெழுகுபோல உருகுவாயே! இப்போது கல்நெஞ்சத்தோடு தூங்குகிறாயே. நித்திரா தேவியின் தன்மை இத் தகையதோ?" என்கிறாள் தோழிகளில் ஒருத்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13ஆம்பாடல்

பைங் குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கம் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலம் கழுவுவார் வந்து சார்தலினால்
எங்கள்பிராட்டியும் எங்கோனும் போன்று இசைந்த
பொங்கு மடுவில் புகப் பாய்ந்து பாய்ந்து நம்
சங்கம் சிலம்பச் சிலம்பு கலந்து ஆர்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல் பாய்ந்து ஆடு ஏல் ஓர் எம்பாவாய்

இப்பாடலில் அம்பாள் தோற்றத்தை அழகுற இயற்கைத் தோற்றத்துடன் சேர்த்து ஒப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளது. கருங்குவளை, செங்கமலம், குருகு, அரவம் ஆகிய நான்கும் எடுத்துக் காட்டுகளாக அமைந்துள்ளன. கருமை அம்பாளின் நிறம். கருமையே இறைவனது கழுத்து நிறம். அம்பாளின் கை வளையல்கள் எழுப்பும் (ஒலி) அரவம், இறைவனும் அரவத்தை அணிந்துள்ளார்.

பத்தொன்பதாம் பாடலில் ஒன்பதாம் பாடலிற் சொன்ன கருத்தை மீண்டும் கொண்டுவந்து இணைத்து கணவர் எப்படி இருக்கவேண்டும், இருந்தால், "நின் அன்பர்" மட்டுமே எம் கணவராக வரத் தகுதி வாய்ந்தவர், அப்படி அமைந்தால் சூரியன் எந்தத் திசையில் உதித்தாலும் கவலைப்பட மாட்டோம் எனத் திடசங்கற்பம் கொள்கின்றனர். உறுதி மொழியே வாழ்வின் வழி.

இறுதிப்பாடல்,

போற்றிஅருளுக நின் ஆதியாம் பாத மலர்
போற்றி அருளுக நின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றிஎல்லா உயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் ஈறாம் இணை அடிகள்
போற்றி மால் நான் முகனும் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்ய ஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழி நீர் ஆடு ஏல்ஓர் எம்பாவாய்

ஆதியும் அந்தமும் இல்லாத இறைவன் எமக்காக ஐந்தொழில் செய்கிறார். தோற்றம் என்பதால் படைப்புத் தொழிலையும் போகமாம் என்பதில் காத்தலையும் ஈறு என்பதால் ஒடுக்கத்தையும் காணாத புண்டரிகம் என்பதால் மறைப்புத் தொழிலையும் யாம் உய்ய என்பதால் அருட்சக்தியையும் கூறி இறைவனைப் போற்றி அருளை வேண்டி நிற்கிறார். இறைவனிடத்திலிருந்து தோன்றி இறைவனிடத்தில் யாவும் ஒடுங்குவதால் அவனது திருவடிகளைப் பற்றி வாழ்ந்தால் அவனே எமக்கு அருள் தருவான்

## அகத்தியர் அருள்வாக்கு

ஒருவனிடம் தருமசிந்தனை இருந்தால், அந்தத் தருமமே அவன் எதிர்காலத்தைப் பார்த்துக்கொள்ளும். உதவும் குணம் இல்லாதவன் எத்தனை வழிபாடு, யாகங்கள், அபிஷேகங்கள் செய்தாலும் அவன் இறையருள் பெற இயலாது. இறை நம்பிக்கை இல்லாதவன்கூட தருமம் செய்தால் இறைவன் அவனிடம் வருவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருக்குறள் கதைகள்

**திருமதி சாவித்திரி ஆனந்தன்**

## தீவினையச்சம்
## *Dreading Evil deeds*

**அதிகாரம்:** *21* **குறள்:** *202*

*"தீவினையார் அஞ்சார் விழுமியார் அஞ்சுவர்*
*தீவினை என்னும் செருக்கு"*

*பொருள்:*
*தீவினை செய்தலாகிய செருக்கைத் தீவினை உடைய பாவிகள் அஞ்சமாட்டார். தீவினை இல்லாத மேலோர் மட்டுமே அஞ்சுவர்.*

**Meaning:**
Those who have experience of evil deeds will not fear but the excellent will fear the pride of sin.

*இராமாயணத்தில் வரும் இராவணனுடைய மனைவியாகிய மண்டோதரியைப் பற்றி அனைவரும் அறிவர். சிறந்த பண்புள்ள, ஒழுக்கம் நிறைந்த, தெய்வீக சக்தி கொண்ட ஒரு பெண்மணியாக அவள் குறிப்பிடப்படுகிறாள். பாவங்களைப் போக்கும் சக்தி கொண்ட பஞ்ச கன்னிகைகளில் ஒருத்தியாகவும் மண்டோதரி கருதப்படுகிறாள்.*

*சீதாதேவியை இராவணன் சிறைப்பிடித்து வந்தபோது, அந்தச்செயல் தவறு என்றும், அறத்துக்குப் புறம்பானது என்றும் கூறி, சீதாவை விட்டுவிடும்படி பல தடவைகள் தன் கணவனிடம் கூறி அறிவுறுத்தினாள். மாயமானாக வந்த மாரீசனை நம்பவேண்டாம் என்பதைப் பலமுறை கூறி இராவணனைத் திருத்த முயற்சி செய்தாள்.*

*இராமன் ஒரு சாதாரண மனிதப்பிறவியல்லர். அவர் விஷ்ணுவின் அவதாரம் என்பதையும் மண்டோதரி அறிந்திருந்தாள்.*

*இறுதியில், இராவணனுக்கும் இராமனுக்கும் நிகழ்ந்த போரில், இராமபாணம் பாய்ந்து இராவணன் மண்ணில் வீழ்கிறான். மண்டோதரி பலவாறு புலம்பி அழுது, பொன் அணிகள் பூண்ட கணவனின் மார்பைத் தன் கைகளில் தழுவி அவன் உடல் மீது விழுந்து உயிர் நீத்தாள். சீதாதேவிக்கு நிகரான மேன்மையும் நற்பண்பும் அவள் கொண்டிருந்தபோதும், தன் கணவனாகிய இராவணனுடைய தீய குணத்தினால் இந்தத் துயர முடிவை அடைந்தாள். மண்டோதரியின் நற்பண்புகளை உணராமலும், தீவினைக்கு அஞ்சாமலும் நடந்து கொண்டதால் இலங்காபுரியின் மன்னனாக விளங்கிய இராவணன் இறுதியில் தோல்வியைத் தழுவிக் கொண்டான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

According to the epic, Ramayana, everyone knows about Ravana's wife Mandothari. She has been referred to as a good natured woman with a divine power. It's also said that Mandothari was one of the Panchakannikaas who had the power of getting rid of any sin.

When Ravana kidnaped Sitadevi and brought her to Lankapuri, Mandothari said it was an injustice and asked Ravana to release Sita and let her go. She also requested Ravana many times, not to believe Mareesan who came as a fake deer only to deceive Rama.

Also, Mandothari advised him saying, 'People who stand in the right path of justice would always be supported by all living things, where as injustice makes one to be ignored even by their siblings'.


Mandothari already knew that Rama was not an ordinary human being and he was an Avatar of Lord Sri Vishnu.

Finally, in the war between Rama and Ravana, Ravana was killed by Rama's powerful arrow 'Ramapana'.

Mandothari cried in disgust and fell deed upon her husband's body.

Even though Mandothari was a powerful and deserved woman like Sita in all aspects, because of Ravana's bad deeds she had to face the tragic end.

Ravana, the king of Lankapuri, not realising his wife's good nature and having an attitude of no fear of doing bad things, eventually met disaster.



# மருத்துவர் S T S சோமசேகரம்

சைவ முன்னேற்றச் சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினராகவும், செயற்குழு உறுப்பினராகவும் அறங்காவலராகவும் இருந்த மருத்துவர் சோமசேகரம் அவர்கள் சிவபதம் அடைந்த செய்தி கேட்டு வருந்துகிறோம்.

செயற்குழுவில் உறுப்பினராக இருந்தபோதும் தொடர்ந்தும் சங்கத்தின் வளர்ச்சிக்குத் தன்னாலான பங்களிப்பை இடைவிடாது வழங்கியவர்.

இலங்கையில் தாய்ச்சங்கத்தின் முன்னாள் தலைவரும் தற்போதைய போஷகருமான திரு தனபாலா அவர்களின் சகோதர். லூயிஷாமில் அமைந்துள்ள சிவன்கோயிலிலும் அறங்காவலர் சபையில் பல காலம் இருந்து கோயிலின் வளர்ச்சிக்கு உதவியவர். அவர்களின் குடும்பமே சைவ சமய வாழ்க்கை முறையைப் பின்பற்றி வாழ்பவர்கள்.

சமயத்திலும் சமூகத்திலும் மிகுந்த அக்கறை கொண்ட மருத்துவர் சோமசேகரம் அவர்கள் பழகுவதற்கு இனிமையானவர்.

அவரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு "கலசம்" குழுவினர் ஆழ்ந்த அநுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாஞ்சாலி சபதம்

சென்ற இதழ்த் தொடர்ச்சி...

பெரிய தந்தையின் அழைப்பை ஏற்று அஸ்தினாபுரம் வந்த பாண்டவர் தாம் பெரிய பிரசினைக்குள் மாட்டிக்கொள்ள இருப்பதை நன்கு அறிந்திருந்தும் மனச் சஞ்சலம் எதுவுமின்றி நிம்மதியாக உறங்கினார்கள் என்பதைப் பாரதியார் “உளச் சிதைவின்மை ஆரியர் சிறப்பன்றோ” என்று வம்சத்தின் பெருமையை எடுத்துரைப்பதுவரை சென்ற இதழில் பார்த்தோம்.

இக்காவியத்தில் பாரதியாரின் புரட்சிக் கருத்துக்களையும் அநியாயத்தைக் கண்டு கொதித்தெழும் உள்ளத்து உணர்வுகளையும் பரவலாகக் காணலாம். விறுவிறுப்பாக படிப்போர் மனதைக் கவர்ந்திழுக்கும் வகையில் கவிதைகளை வடித்துள்ளார்.

அடுத்தநாட் காலை சூரிய உதயத்துக்குமுன்பு பாண்டவர் நித்திரை விட்டெழுந்து காலைக் கடன்களை முடித்துக்கொண்டு பின்னர் கடவுளை வணங்கினர். மன்னர்கள் அணிகின்ற பட்டாடைகள் , அபரணங்கள் யாவும் அணிந்து கொண்டு திருதராட்டிரன் அரசசபைக்கு வந்தனர். அங்கு எதற்கும் வெட்கப்படாத கௌரவர்கள் தம் மன்னராகிய திருதராட்டிரனுடன் இருந்தனர். அத்துடன் பிதாமகர் பீஷ்மர், விதுரர், துரோணர், கிருபாச்சாரியார், அமைச்சர்கள், வேறு பலநாட்டு மன்னர்களும் அறிவற்ற துரியோதனனும், அவனுடைய சகோதரர்கள் நண்பர்கள் யாவரும் அந்தச் சபையில் இருந்தனர். (இங்கு முக்கியமானவர்களுடன் கீழ்த்தரமானவர்களும் கூடியிருந்தனர் என்பதை அறியமுடிகிறது.)

## அநுஜா

அந்தச் சபையின் நடுவில் இழிதொழிலாகிய சூதாட்டத்தில் இவ்வுலகில் ஒப்பற்றவனாகிய (தன்னிகரற்ற) வனும் நல்லதை அறியாது கெடுதல் செய்வதை மட்டும் அறிந்தவனுமாகிய சகுனி சிங்கம்போல இறுமாப்புடன் மிக மகிழ்ச்சியாகக் காணப்பட்டான். ஏனென்றால் பாண்டவரைச் சூதாட்டத்தில் தோற்கடிக்க தன்னால் முடியும் என்ற நம்பிக்கை அவனுக்கு இருந்தது. இவனைப்போலச் சூதாட்டத்தில் சிறந்த சித்திரசேனன், சத்திய விரதன் சயன் என்போருடன் வஞ்சனையுள்ள பலர் சகுனியின் ஆதரவாளர்கள் எல்லோரும் நடக்கவிருக்கும் சூதாட்டத்தைப் பார்க்க ஆரவாரமாக இருந்தனர். இதனைப் பாரதியார்,

“கோலநற் சபைதனிலே - வந்து
கொக்கரத்து ஆர்ப்பரித்திருந்தனரால்” என்கிறார்.

ஏனென்றால் போரினால் வெல்லமுடியாத இந்தப் பாண்டவ வீரர்களைச் சூதாட்டம் என்னும் குறுக்கு வழியில் சென்று தங்களாற் தோற்கடிக்க முடியும் என்ற அளவற்ற நம்பிக்கையுடன் ஆரவாரமாக இருந்தனர்.

சபையினுள்ளே வந்த பாண்டவர்கள் அங்கிருந்த பெரியோர்களை முறைப்படி வணங்கியபின்பு இளைஞர்களை ஆரத் தழுவிவிட்டு தமக்குரிய செம்பொன்னாலாகிய ஆசனத்தில் அமர்ந்தனர். அவர்கள் அமர்ந்ததுமே சிறிதும் தாமதிக்காது சகுனி தர்மரைப் பார்த்து, “அறத்தின் வடிவானவனே! விற்போரில் உலகை வென்று உனது குலத்தை மேன்மைப்படுத்தியுள்ளாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது சூதாட்டம் என்னும் போரில் உனது திறமையைப் பார்ப்போம். வருவாயாக! இந்தச் சபையிலுள்ள மன்னர்களெல்லாம் உங்கள் வருகைக்காக நீண்டநேரமாகக் காத்திருக்கின்றனர்" என்றான்.

அதனைக்கேட்ட தருமர், "ஐயனே! சூழ்ச்சி மிகுந்த சூதினை ஆட அழைக்கின்றாய். இதில் வெற்றி பெறுவதில் பெருமை உண்டோ? அறநெறிக்கு ஏற்றதோ? வீரத்துக்குப் பெருமை சேர்க்குமோ? வஞ்சனை மிகுந்த மனங்கொண்டவரே நீ நாங்கள் நன்றாக வாழ்வதை விரும்பவில்லை என்பதை நான் அறிந்துள்ளேன். இந்தப் பிறவிக்கும் மறுபிறவிக்கும் கேடுதரும் இந்த இழிதொழிலால் எம்மை அழிக்க எண்ணுகிறாய்" என்றான்.

இதைக் கேட்ட சகுனி கலகல என்று சிரித்து, "நீ பெரும் வீரன் என்று உலகத்தோர் சொல்வதைக் கேட்டு உன்னைச் சூதாட அழைத்தேன். கொஞ்சம் விளையாட்டுக்காகப் பொருள் செலவழிக்கத் தயங்கமாட்டாய் என்றல்லவா நான் நினைத்தேன். பாரத நாட்டரசன் ஒரு கஞ்சன் என்று எனக்குத் தெரியாதே. அரசர்கள் சூதாடுவது வழக்கந்தானே! இதில் களவு எதுவும் இல்லை. இந்தப் பட்டப்பகலில் இவ்வளவு பெரியசபையில் உனது சொத்தைத் திருடப்போவதாக நினைக்கிறாயா?" பாண்டவர்களின் செல்வத்தையெல்லாம் சூதினால் அபகரிக்க மனதில் திட்டமிட்டு அங்கு அமர்ந்திருந்த சகுனி இப்படிக்கேட்கிறான். பின்பு, "இதில் பயப்பட ஒன்றுமில்லை. நேரமாகிறது. விரைவில் தொடங்குவோம். வெற்றி என்பது என்றும் உனக்குத்தானே! ஆனபடியால் நீதான் வெல்வாய" என்று கூறித் தர்மரைச் சம்மதிக்க வைக்க முயல்கிறான்.

பசுவின் தோலை விற்பதற்காகப் பசுவைக் கொல்லக்கூடிய மனம் கொண்ட துட்டனாகிய சகுனி சொல்வதைக்கேட்ட தர்மர், அறநெறியில் அரசர் தவிர்க்கவேண்டிய செயல்களைச் செய்ய அச்சம் கொண்டவர் மனம் மிகவும் வருந்தி பின்வருமாறு கூறுகிறார். "நாட்டை ஆளும் மன்னர்களுக்கு சூது என்பது நஞ்சைப்போன்றது எனப் பெரியோர்கள் கூறியுள்ளனர். வஞ்சகமாக வெற்றியீட்ட விரும்பமாட்டார். போர்க்களத்தில் போராடி வெற்றி பெறுவதையே மதிப்பர். பெருமை மிக்க இப் பாரதநாட்டில் இறக்க நேர்ந்தாலும் தூய்மையான வார்த்தைகளையே பேசுவார்கள். தீமை பயக்கும் கெட்ட சொற்களைச் சொல்லமாட்டார்கள். ஆனபடியால் நான் சூதாடுவதை விரும்பவில்லை" என்று கூறி, மேலும் "நான் செல்வத்துக்கும் புகழுக்கும் ஆசைப்பட்டு அரசாளவில்லை. நல்ல அறநெறி தழைத்து ஓங்கவும் கற்றலாலும் கற்பித்தலாலும் கல்வி, கலைகள் யாவும் வளர்ச்சி அடையவும் அவை அழிந்துபோகாமற் காப்பாற்றவுமே நான் அரசாட்சி செய்கிறேன் என்பதை நீ அறிந்துகொள்வாயாக" என்று சகுனிக்குக் கூறுகிறார். மேலும் தர்மர் தொடர்ந்து, "என்னை வஞ்சித்து எனது செல்வத்தைக் கொள்வோர் எனக்குத் துன்பம் செய்பவரல்லர். பேரறிவைத் தரும் கல்வி கலைகள் யாவற்றையும் மாய்த்து விடுவர். துன்பத்தைத் தருகின்ற கலியை இங்கு வரவழைப்பர். இவ்வாறு நாட்டுக்கும் மக்களுக்கும் அழிவைத் தரக்கூடிய சூதாடும் எண்ணத்தைக் கைவிடுமாறு உன்னைப் பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்" என மன்றாட்டமாகச் சொல்லுகிறார் அறநெறி திறம்பாத அரசராகிய தர்மர்.

தர்மரின் பணிவான வேண்டுகோளைக் கேட்டதும், சகுனி கண்ணில் கோபக்கனல் பறக்க ஆத்திரத்துடன் "நீ உன் பேச்சுத்திறனால் சாத்திரங்கள் பலவற்றைஎடுத்து உரைக்கின்றாய். கௌரவமான மன்னர்கள் தம் புகழைப் பறைசாற்றியும் மற்றவர்களைக் குறைவுபடக் கூறுவார்களோ? ஆனால் நம்மவர் பின்பற்றும் பழைய வழக்கத்தைமட்டும் மறந்துவிட்டாய். மன்னர் வலிய உன்னைச் சூதாட்டத்துக்கு அழைத்தால் மறுக்கும் வழக்கம் உண்டோ?" எப்படியும் தருமரைச் சம்மதிக்கச்செய்து சூதாடி அவரை வென்றுவிடவேண்டும் என்ற நோக்கத்தில் இருக்கும் சகுனி அவரை வலுக்கட்டாயப்படத்தி தொடர்ந்து வாதாடுகிறான். "எந்தத் தொழிலானாலும் அதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்ச்சி பெற்றவர் வெல்வதும் தேர்ச்சி அற்றவர் தோற்பதும் வழக்கம். வாட்போரானாலும் சாத்திரம் சம்பந்தமான வாதானாலும் திறமையைப் பொறுத்தே வெற்றி கிட்டும். அதைச் சூதென்றும் சதி என்றும் எவரும் கூறுவதில்லை. பல மன்னர் முன்னிலையில் உன்னை அழைத்துவிட்டடேன். நீ சூதாட வருகிறாயா? சொல்லுக அல்லது மனதில் துணிவில்லை என்றால் அதையும் கூறுவாய்" என்றான்.

அறத்தினின்றும் விலகக்கூடாது என்பதை நன்கு உணர்ந்த தர்மர் விதியின் கொடுமையால் அறிவற்ற பொய்யுரைகளைக் கேட்டு சூதாடச் சம்மதிக்கிறார். பாரதியார், "புலனில்லாதவர் தம்முடம்பாட்டை ஐயன் நெஞ்சில் அறமெனக் கொண்டான். ஐயகோ! துய்ய சிந்தையர் எத்தனை மக்கள் துன்பம் இவ்வகை எய்தினர் அம்மா" என்கிறார். பரிசுத்தமான மனமுள்ள எத்தனைபேர் இப்படியாகத் துன்பத்துக்கு ஆளாகியிருக்கின்றனர் என்றொரு கேள்வியை முன்வைத்த பாரதியார் மேலும் தொடர்கிறார். முன்பு இருந்ததென்ற காரணத்தினாலே மூடப்பழகத்தை கடைப் பிடிக்கலாமோ? முன்பு என்றால் நேற்றும் முன்புதான். மூன்றுகோடி ஆண்டுகளுக்கு முன்னரும் முன்புதான். அதனை அளவிட இயலாது. முன்பு பிறந்தவர்கள் எல்லோரும் முனிவர்கள் அல்லர். முட்டாள்களும் இருந்திருக்கிறார்கள். அந்தக் காலத்திலிருந்தே தவறானவற்றைச் சாத்திரம் என்றும் வழக்கென்றும் அறமென்றும் கடைப்படித்து அழிந்தவர் கோடி. அதைப்போல் அறநூல்களைக் கற்று உணர்ந்தோர் அறிவு மிகுந்தோரில் உயர்ந்தவன் என்று சொல்லத்தக்க தர்மரும் விதிவசத்தாலே அதற்குச் சம்மதிக்கவேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டார். உலகில் விதியின் வலிமை மதி (அறிவு) யை மயக்கும். விதியின் பிடியிலிருந்து எவரும் தப்ப முடியாது. அதனால் பெரியோரெல்லாம், "எல்லாம் விதிப்படியே நடக்கும். அது அவரவரின் கர்மவினையைப் பொறுத்தது" என்பரர். அதை பாரதியார், "விதியினும் பெரியதோர் பொருளுண்டோ? மேலை நாம் செய்யும் கர்மம் அல்லாதே" இதையும் பாரதியார் எப்படியென விளக்குகிறார். ஓடும் நதியினிலே ஒரு பள்ளம் இருக்குமானால் அதிலே எல்லாவிதமான குப்பைகளும் சென்றடையும். அதைப்போல ஒருவரின் முன்னோர் செய்த பாவங்களும் அவரைச் சென்றடையும். அவரது சந்ததியும் பாதிக்கப்படும். சாதாரணமாக நடைமுறை வாழ்க்கையில் ஒரு பாவமுமே செய்யாத நல்ல மனிதர்கள் பலர் பலவித துன்பங்களுக்கு ஆளாகி அவதிப்படுவதைக் காணக்கூடியதாக உள்ளது. காரணம் எதையும் கண்டுபிடிக்க முடியாத நிலையில் அது முன்பு செய்த கர்மமாக இருக்கும் என எல்லோரும் சொல்லிக்கொள்வார்கள்.

பட்டினத்தடிகள் தியானத்தில் இருந்தபோது அந்த வழியே சென்ற திருடர்கள் கடவுள் சிலைமீது எறிந்த முத்துமாலை அவரின் கழுத்தில் விழுந்தது. திருடரைத் தேடிய அரசரின் காவலர்கள் பட்டினத்தாரின் கழுத்தில் இருந்த மாலையைக் கண்டு, அவரைப் பிடித்துச் சென்று விசாரித்தார்கள். அவர் மௌனமாக இருக்கவே, உண்மையான திருடன் அவர்தான் என நினைத்து அரசனிடம் தெரிவித்தபோது கழுவேற்றும்படி அரசன் உத்தரவிட்டான். பட்டினத்தாரைக் கழுவேற்ற அழைத்துச் சென்றார்கள். முன்செய்த வினைதான் தன்னை இந்த நிலைக்கு ஆளாக்கியது என்று மனத்தில் நினைத்த பட்டினத்தடிகள் இறைவனை வணங்கினார். கழுமரம் எரிந்து சாம்பலாகியது. இதைப் பார்த்த காவலர்கள் பயந்தோடிச் சென்று அரசனிடம் நடந்ததைத் தெரிவித்தனர். அரசன் வந்து பட்டினத்தடிகளை வணங்கி மன்னிப்புக் கேட்டான் என்றொரு வரலாறு உண்டு.

ஆக, முனிவராக இருந்தாலும் முன்வினை விடாது என்பதற்கு இது நல்ல உதாரணம். ஆனால், தனது தவவலிமையால் பட்டினத்தடிகள் பிழைத்துக்கொண்டார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகன் தலம் மூன்று

செல்வி இ.கிருபிகா, மிருசுவில்.

சைவத் தமிழ்க் கலாசாரத்தின்படி வாழும் ஈழம் வாழ் சைவத்தமிழ் மக்களுக்கு அதுவும் குறிப்பாக வடபுலத்தவர்களுக்கு முக்கிய முருகன் வதியும் தலங்களாக இருப்பவை. மூன்று. அவையாவன, யாழ்ப்பாண நகரில் அமைந்துள்ள நல்லூர் கந்தசுவாமி கோயில், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில்,. செல்வச்சந்நிதி ஆலயம். இந்த மூன்று ஆலயங்களைப் பற்றிச் சிறிது நோக்குவோம்.

யாழ்ப்பாண நகரில் அமைந்துள்ள ஓர் ஊர் நல்லூர் ஆகும். இவ்வூரைத் தலைநகராக் கொண்டு ஆரியச்சக்கரவர்த்திகள் எனப்படும் அரசர்களால் ஆளப்பட்டு வந்ததை எம்மால் அறியக்கூடியதாக உள்ளது. ஆரம்பத்தில் இந்த ஆலயம் சிறியதாகத்தான் இருந்தது. ஆயினும் இலங்கையை ஆண்ட போர்த்துக்கேயரால் இவ்வாலயம் முற்றுமுழுதாக இடித்தழிக்கப்பட்டது. தற்போது உள்ள நல்லூர்க் கந்தசாமி கோயில் போர்த்துக்கேயரின் பின் இலங்கையை ஆண்ட ஒல்லாந்தரின் காலத்தில் ஒரு மடாலயமாக ஆரம்பிக்கப்பட்டது.




முருகன் திருவருளினால் இது காலத்திற்கு காலம் வளர்ச்சிபெற்று இன்று இரண்டு வாயிற் கோபுரங்களுடனும், நான்கு மணிக்கூட்டுக் கோபுரங்களுடனும் காட்சியளிக்கின்றது. இவற்றைவிட நான்கு புறமும் படித்துறைகள் அமைந்த விசாலமான தீர்த்தக்கேணியும் அகலமான தேரோடும் வீதிகளும் இருக்கின்றன. அதுமட்டுமின்றி இவ்வாலயத்தைச் சுற்றிவர பல மடங்கள் அமைந்தும் காணப்படுகின்றன. அவற்றுள் தேர்முட்டிக்கு அண்மையிலுள்ள அறுபத்துமூவர் மடம் முக்கியமானது. இவ்வாலயத்தின் நான்கு காண்டாமணிகளும் மிகப்பெரியவை. ஓசை நயமுடையவை. காலையில் விநாடி தவறாமல் சரியாக நான்கு மணிக்கு காண்டாமணி ஒன்று அடிக்கப்படும். இதன் ஒலி ஐந்து மைல் சுற்றாடலுக்குக் கேட்கும் என்பார்கள். முருகனுக்குரிய திருவனந்தல் பூசை இவ்வொலி கேட்ட அரை மணி நேரத்தில் நடக்கும் என்பதை மக்களுக்கு அறிவிக்கும். யாழ்நகர சைவமக்களின் சிந்தனையில் நல்லூர்க் கந்தன் என்றும் குடியிருக்கின்றான். இவ்வாலயத்தில் கொடியேற்றுவிழா நடக்கும்போது யாழ் சைவத்தமிழ் மக்களிடம் ஒரு புனிதம் குடிகொண்டிருக்கும். அது மட்டுமின்றி மக்களின் மனங்களிலும் பக்திப்பரவசம் மேலோங்கி இருக்கும். இந்த ஆலயத்தின் திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கி இருபத்தைந்து நாள்கள் நடைபெறும். பத்தாந் திருவிழாவன்று முருகப்பெருமான் அழகிய மஞ்சத்தில் வீதியுலா வருவார். நல்லூர்க் கந்தன் சித்திரத்தேரில் வருதல் பார்ப்பவர் கண்களுக்கும் மனதிற்கும் ஒரு கண்கொள்ளக் காட்சியாக இருக்கும்.. ஆவணி அமாவாசையன்று நடைபெறும் தீர்த்த உற்சவத்தின்போது பஞ்சமூர்த்திகள் வெள்ளி வாகனங்களில் எழுந்தருளும் காட்சி பார்ப்பவர்களின் உள்ளத்தைப் பரவசமாக்கும். தீர்த்த உற்சவத்தின் மறுநாள் பூங்காவன உற்சவம் நடைபெறும். இப்பூங்காவன உற்சவத்துடன் திருவிழா இனிதே நிறைவுபெறும். இவ்வாறு நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தைப்பற்றியும் அங்கு வீற்றிருந்து அடியவர்களுக்கு அருள் பாலித்துக்கொண்டிருக்கும் நல்லூக் கந்தனது பெருமைகளையும் அடுக்கிக்கொண்டே செல்லலாம்.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலும் நல்லூர்க் கந்சுவாமி கோயிலைப் போன்று. மிகவும் புகழ் வாய்ந்தது. இவ்வாலயத்துடன் தொடர்புடைய கதையொன்று உள்ளது. சோழதேசத்து அரசன் ஒருவனுக்கு மாருதப்புரவீகவல்லி என்ற பெயடைய ஒரு மகள் இருந்தாள். அவளுடைய முகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குதிரை முகத்தின் சாயலைக் கொண்டிருந்தது. இது அவளுக்கும், அரசனுக்கும் பெரும் கவலையை ஏற்படுத்தியிருந்தது. மாருதப்பபுரவீகவல்லி தன்னுடைய இக்கவலையை நீக்க விரதங்கள் இருந்தும் யாத்திரைகள் செய்தும் இறைவனிடம் தன் துயரை நீக்கும்படியும் வேண்டிவந்தாள். ஒருபொழுது யாத்திரையாக ஈழத்திற்கு வருகை புரிந்தபோது யாழ்ப்பாணம் கீரிமலையில் இருந்த நகுலமுனிவரைச் சந்தித்து வணங்கினாள். நகுலமுனிவரின் சொற்படி கீரிமலைத் தீர்த்தத்தில் நீராடி நகுலேஸ்வரப் பெருமானை வணங்கினாள். என்ன வியப்பு! குதிரைச் சாயலுடைய அவளின் முகம் நீங்கி அவள் பேரழகுடன் விளங்கினாள். தனக்கு நடந்த இந்த அதிசயத்தக்க விடயங்களைச் சோழ அரசனான தன் தந்தைக்கு அறிவித்தாள். அரசன் மகள் அனுப்பிய செய்தியால் மிகவும் சந்தோஷமடைந்தான்.. முருகப்பெருமானின் சிலை ஒன்றை மகளுக்கு தூதுவன் மூலம் அனுப்பி வைத்தான். சிலை மரக்கலத்தில் வந்து சேர்ந்தது. முருகப்பெருமானின் சிலை வந்து இறங்கிய இடம்தான் தற்பொழுது "காங்கேசன்துறை" என்ற பெயருடன் விளங்குவதை அறியலாம். சிவபெருமானின் நெற்றிக்கண்ணிலிருந்து தோன்றிய ஆறு பொறிகளும் கங்கா நதிப் பொய்கையில் சேர்த்ததல்லவா! அதனால்தான் முருகனுக்குக் காங்கேயன் என்ற நாமம் உண்டாகியது.



மாவிட்டபுரம் முருகன் கோயில் விசாலமான கோபுரத்துடன் வளமான ஆலயமாகத் திகழ்கின்றது. ஆண்டுதோறும் இருபத்தைந்து நாள்கள் திருவிழா நடைபெறும். முதல்நாள் கொடியேற்றத்துடன் திருவிழா ஆரம்பித்து ஆடி அமாவாசை அன்று தீர்த்தத் திருவிழாவுடன் நிறைவு பெறும். தீர்த்தத் திருவிழா அன்று சுவாமி வள்ளி தெய்வானையுடன் இரண்டு மைல் தொலைவிலுள்ள கீரிமலைக் கடற்கரைக்கு எழுந்தருளுவார். ஆயிரக்கணக்கான பக்தர்கள் சுவாமியைச் சூழ்ந்து கொண்டு செல்வதைக் காணலாம். இவ்வாறு மாவிட்டபுரம் முருகன் ஆலயத்தைப் பற்றியும் அங்குள்ள முருகப்பெருமானின் திருவருள் பற்றியும் கூறிக்கொண்டே போகலாம்.

நல்லூர்க் கந்தன் ஆலயம், மாவிட்டபுரம் முருகன் ஆலயம் போன்ற ஆலயங்களைப் போலவே செல்வச் சந்நிதி முருகன் ஆலயமும் பெருமை வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது.

மாவிட்டபுரத்திலிருந்து ஏறக்குறை பத்து மைல் தொலைவிலே தொண்டைமான் ஆற்றங் கரையிலும் முருகன் விரும்பி உறைகின்றார். இந்த ஆலயம் செல்வச்சந்நிதி எனக் குறிப்பிடப்படுகிறது. இங்கே ஆலயம் சிறியது. ஆனால் சூழலின் இயற்கை வனப்பு அளப்பரியது.

இவ் ஆலயத்தின் தோற்றம், அமைப்பு, நடைமுறை என்பன தனித்துவமானவையும் வரலாற்றுச் சிறப்புமிக்கவையுமாகும். உலகில் எவ்விடத்திலும் காணப்படாத தனித்துவம் இங்கே காணப் படுகிறதென்றால் இதன் புதுமைக்கும் பொலிவுக்கும் தெய்வத்தின் திருவருட்தன்மைக்கும் அளவே கூறமுடியாதுள்ளது. இங்கே குடிகொண்டுள்ள கந்தசுவாமியார் என்ற முருகன் திருவருளானது மிகுந்து எங்கும் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. முருகப்பெருமானது கருணை வெள்ளம் மடைதிறந்து பாய்கிறபடியால் அங்கு வரும் அடியார்கள் பக்தி வெள்ளத்தில் மூழ்கி திருவருளையும் திருவள் பிரசாதத்தையும் தினந்தோறும் அடியார்கள் பெற்ற வண்ணம் இருக்கிறார்கள். இவ்வாலயத்தின் மூர்த்தி, தலம், தீர்த்தம் மிகச் சிறப்பானதாக காணப்படுகின்றது. இவ்வாலயத்தின் தலவிருட்சமாக பூவரச மரம் அமைந்துள்ளது.

இந்தக் கோயிலில் முதலில் முருகனுக்கு பிரசாதம் படைத்து பின்பு பக்தகோடிகளுக்கும் பிரசாதம் வழங்கும் முறை இன்றும் நடைமுறையிலிருக்கிறது.. இதனால் இவ்வாலயத்தில் இருந்த அருள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கும் கந்தப்பெருமானை "அன்னதானக் கந்தன்" என அடியார்கள் செல்லமாகக் குறிப்பிடுவது செல்வச்சந்நிதி முருகனையே ஆகும்.

ஆண்டுதோறும் இவ் ஆலயத்தில் ஆவணி மாதத்தில் நடைபெறும் மகோற்சவத்தின் போது



நாட்டின் பல பாகங்களிலிருந்தும் புலம்பெயர் நாடுகளிலிருந்தும் பெருந்தொகையான மக்கள் வருவதைக் காணலாம். இந்த ஆலயத்திற்குரிய தேர்வடம்கூட கடலிலேயே வந்து சேர்ந்ததாக கூறுவார்கள். இது அடியார்களின் மனதிலே ஓர் ஆழப்பதிந்த அதிசயம். மக்கள் தங்கள் நல்ல காரியங்களைக் கூட இவ்வாலயத்திலே வழிபட்டு தொடங்குவது அன்றாட நிகழ்வாகப் பார்க்கலாம்.

கதிர்காமம், மண்டூர் ஆகிய தலங்களைப்போல இங்கும் பூசகர் மஞ்சள் நிறத் துண்டால் வாயைக்கட்டி பூஜைகள் செய்வதைக் காணலாம். அடியார்கள் செலவச்சந்நிதியானைத் தரிசித்து வேண்டிய வரங்களை பெற்றுச் செல்வார்கள் என்றும் அவனருள் சொல்லிலடங்காதவை என்றும் கூறுவார்கள்.

நல்லூர்க்கந்தன், மாவிட்டபுரம் கந்தசுவாமி, செல்வச்சந்நிதி முருகன் ஆலயங்களின் அற்புதங்கள் சொல்லில் அடங்கா.

## விளக்கேற்றுவதன் தத்துவம்

கார்த்திகை மாதத்தில், கார்த்திகைத் தீபம் ஏற்றும் வழக்கம் உண்டு. முருகன் கோயில்களில் இந்தத் தீப வழிபாடு (குறிப்பாக இலங்கையில்) விசேஷமாக நடைபெறும். முருகனுக்குத் தினை மாவில் தீபம் போலச் செய்து, நெய் விளக்கேற்றி வழிபடுவர்.

ஆன்மிகக் காரணம் என்ன?



விளக்கை ஏற்றுவதற்கு 'திரி' வேண்டும். கயிறுபோலத் திரி இருப்பதால் அதைப் பாசம் என்று சொல்வர். பாசக் கயிற்றால் மனிதன் கட்டப்பட்டிருக்கிறான். தாரம் (கணவன், மனைவி) குழந்தை, பணம் என்று பலவற்றின் மீது பாசம் இருக்கும்.

விளக்கெரிய எண்ணெய் தேவை. எண்ணெயை வடமொழியில் 'ஸ்நேகம்' என்பர். ஸ்நேகம் என்றால் நட்பு அல்லது உறவு. எண்ணெயை விளக்கில் ஊற்றும்போது பிசுக்காகப் பற்றிக்கொள்ளும். இது வாழ்க்கைமீது மனிதன் கொண்டுள்ள பற்றை விளக்குகிறது.

விளக்கில் 'ஜோதி' என்னும் நெருப்பு ஏற்றப்படுகிறது. இது திரியையும் எண்ணெயையும் கரைத்துவிடுகிறது. கடைசியில் அதுவும் அணைந்துபோகிறது. அதாவது மனிதன் பந்தபாசத்தையும் பற்றையும் அறுத்தால் ஞானமாகிய ஜோதியில் ஐக்கியமாகிவிடலாம் என்பதே தத்துவம்.

- ஜெயலட்சுமி கோபாலன், சென்னை

நன்றி: பெண்மணி, ஒக்டோபர் 2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசன் வாத்தியார்

முத்து

அது இலண்டனில் இயங்கும் ஒரு தமிழ்ப்பள்ளி. தமிழையும் சைவத்தையும் வளர்க்கும் இலட்சியத்துடன் ஆரம்பித்த பள்ளி. பிள்ளைகளை நன்னெறிப்படுத்த வல்லது சமயமே! இந்து சமயம் மக்களை முழுமைப்படுத்துவது. சமயத்தைத் தெளிவாக அறிந்துகொள்ள, புரிந்துகொண்டு பின்பற்றத் தமிழ்மொழி இன்றியமையாதது. தமிழிலேயே பக்தி இலக்கியங்கள், திருமுறைகள், நீதி நூல்கள், சமய தத்துவத்தை உள்ளடக்கிய புராண - இதிகாசங்கள் யாவும் வேறு மொழிகளில் இல்லாத அளவுக்குப் பெருந்தொகையாக உள்ளன. அதனால், இந்தப் பள்ளிக்கூடம் தமிழையும் சைவத்தையும் இரு கண்களாகப் போற்றி வளர்க்கின்றது. அதில் வெற்றியீட்டியும் வருகின்றது. புதியதோர் தலைமுறை உருவாக இது அடித்தளமாக அமைந்ததென்றால் அது மிகையில்லை.

சனிக்கிழமை காலை பதினொருமணி. ஆறாம் வகுப்பு மாணவர்கள் தமிழைச் சுவைபடக் கற்பிக்கும் இராசன் வாத்தியாரின் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டு வகுப்பில் இருக்கிறார்கள். வாத்தியார் நேரம் தவறாது வகுப்பில் நுழைகிறார். மாணவர்கள் மிகுந்த மகிழ்சியோடும் ஆரவாரத்தோடும் எழுந்து நின்று வணக்கம் சொல்கிறார்கள்.
மாணவர்கள்: வணக்கம் வாத்தியார் ஐயா!

வாத்தியார்: (மலர்ந்த முகத்துடன்) அன்புக்குரிய மாணவச் செல்வங்களே உங்கள் அனைவருக்கும் வணக்ககம்.அமருங்கள்.

கண்ணன்: வாத்தியார், எனக்கு ஒரு சந்தேகம், கேட்கலாமா?

வாத்தியார்: (புன்முறுவலுடன்) என்ன கண்ணா! சொல், உனக்கு எப்போதுமே ஏதாவது ஒரு சந்தேகம் வரும். நல்லது! கேள். மற்றைய மாணவர்களுக்கும் பயன்படுந்தானே. உங்கள் சந்தேகத்தைத் தீர்க்கத்தானே நான் இருக்கிறேன்.

கண்ணன்: மாணவச் செல்வங்களே என்று எங்களைக் கூப்பிடுகிறீர்கள். பணம், பொருள் இவற்றைத்தானே செல்வம் என்பார்கள். சின்னப் பிள்ளைகள் எப்படிச் செல்வம் ஆகும்?

வாத்தியார்: ஓ! நல்ல கேள்வி கண்ணா! உலகத்தில் பதினாறு விதமான செல்வம் இருக்கிறது என்பார்கள். அதில் கிள்ளைச் செல்வமும் ஒன்று. பெற்றோர்களுக்குப் பிள்ளைகள்தான் சிறந்த செல்வம். ஏனென்றால், பொருள், பணம் எதுவுமே பேசா. ஆனால் குழந்தைகள் பேசும், சிரிக்கும், குறும்புசெய்யும். ஏன் உன்னைப் பார். கேள்வி கேட்கும்.(மாணவர்கள் அனைவரும் சிரிக்கிறார்கள்) வீட்டில் ஒரு குழந்தை இருந்தால் அந்த வீடே கலகல என்றிருக்கும் கண்ணா!

கண்ணன்: ஓம்! அது சரிதான். இப்போது எனக்கு நல்லாக விளங்கியது ஐயா! நன்றி.

ராம்: ஓம் ஐயா! இதைப்பற்றி எங்கள் தாத்தா பாட்டியும் சொல்லியிருக்கிறார்கள். (எல்லாப் பிள்ளைகளும் இதை ஆமோதிப்பதுபோலத் தலை ஆட்டுகிறார்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாத்தியார்: பிள்ளைகளே! போனவாரம் சொல்லிக்கொடுத்த ஆத்திசூடி, திருக்குறள் எல்லாம் மனப்பாடம் செய்துவிட்டீர்களா?

ஆரணி: எனக்கு எல்லாமே பாடம் ஐயா.

வாத்தியார்: நல்லது, கெட்டிக்காரி. மனப்பாடம் செய்வது நல்ல பழக்கம். மூளை சுறுசுறுப்பாக வேலைசெய்யும். ஞாபகசக்தியும் கூடும். (Memory power)

கிருஷணா: எனக்கு அரைவாசிக்குமேல் பாடம் ஐயா!

வாத்தியார்: வழக்கமாக எல்லாம் பாடமாக்கிவிடுவாயே!ஏன் இன்று செய்யவில்லை.?

கிருஷ்ணா: பாட்டிதான் எனக்குப் பாடமாக்க உதவி செய்வார். இந்தக்கிழமை அவவுக்கு உடம்பு முடியவில்லை ஐயா!

வாத்தியார்: அது பரவாயில்லை, அடுத்தமுறை பாடமாக்கி வா!
(சிலர் முழுவதும் பாடமாக்கிவிட்டார்கள். மற்றவர்களை முயலும்படி வாத்தியார் ஊக்கப்படுடுத்துகிறார்.)

அமுதா: எனக்கு பாடம் ஐயா! சொல்லிக் காட்டட்டுமா?

வாத்தியார்: சரி, சொல் பார்க்கலாம்

அமுதா: எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு

வாத்தியார்: கெட்டிக்காரி அமுதா, இருங்கோ. (மற்றைய பிள்ளைகளைப் பார்த்து)
பிள்ளைகளே! மனப்பாடம் செய்தவர்கள் இப்போது ஒவ்வொருவராகச் சொல்லப்போகிறார்கள். மற்றவர்கள் கவனமாகக் கேளுங்கள்.
அப்போது பாடமில்லாதவர்களுக்கும் பாடம் வந்துவிடும்.

கிருஷ்ணா: ஓம் ஐயா அது நல்ல Idea. நான் மிச்சத்தையும் பாடமாக்கி வகுப்பு முடியும்போது உங்களுக்குச் சொல்லுவேன்.

வாத்தியார்: ஓம் அப்படித்தான் ஊக்கமாகப் படிக்கவேண்டும். "முயற்சி திருவினை ஆக்கும்"

கிருஷ்ணா: எங்கள் பாட்டி இதை அடிக்கடி சொல்லுவா ஐயா! எனக்கு அதன் meaning கூடத் தெரியும் ஐயா!

வாத்தியார்: நல்லது, சொல் பார்க்கலாம்.

கிருஷ்ணா: நாங்கள் எந்தக் கடினமான விடயத்தையும் விடாது முயன்றால் கடைசியில் வெற்றி அடையலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாத்தியார்: மிகவும் நல்லது கிருஷ்ணா! பிள்ளைகளே இந்தப் பழமொழியின் கருத்து இப்போது உங்களுக்கும் விளங்கிவிட்டதா? படிப்பில் மட்டுமல்ல, நீங்கள் என்ன செய்ய விரும்பினாலும் அதைப் பெறலாம். விடாது ஊக்கமாக முயலவேண்டும். முயலுங்கள்!

பிள்ளைகள்: ஓம் ஐயா! நாங்கள் செய்வோம்.

வாத்தியார்: நல்லது, ஒருநாளைக்கு நீங்கள் எல்லோரும் என்ன செய்யப்போகிறீர்கள் என்பது பற்றிப் பேசுவோம்.. இப்போது இந்தக் குறளின் கருத்து எத்தனைபேருக்குத் தெரியும்?
(சிலர் தங்களுக்குத் தெரியும் என்று கையை உயர்த்துகிறார்கள்)

வாத்தியார்: எங்கே யாராவது ஒருத்தர் சொல்லுங்கள் பார்ப்போம்.

ராம்: எனக்குத் தெரியும் ஐயா! நான் சொல்லட்டுமா?

வாத்தியார்: சரி, சொல் ராம்!

ராம்: யார் யார் எதைப்பற்றிச் சொன்னாலும் அதனதன் கருத்தை நாம் சரியாக அறிந்துகொள்வதே உண்மையான அறிவாகும்.

வாத்தியார்: நல்லது ராம், பிள்ளைகளே! இந்தக் குறள் எந்த அதிகாரத்தில் உள்ளது என்று சொல்ல முடியுமா?

கீதா: அறிவுடைமை என்ற அதிகாரத்தில் மூன்றாவது குறள் ஐயா!
வாத்தியார்: ஓ! கெட்டிக்காரி கீதா. எல்லோருக்கும் கீதா சொன்னது கேட்டதா?

பிள்ளைகள்: ஓம் ஐயா! எங்கள் எல்லோருக்கும் கேட்டது. கீதாவுக்கு அப்படி ஒரு குரல் ஐயா!

வாத்தியார்: கீதா மாதிரி எல்லோரும் தெளிவாகப் பேசப் பழகுங்கள் பிள்ளைகளே! இப்போது இன்னொரு குறள் படிப்போமா?

கண்ணன்: அந்தக் குறளைப் படித்த பிறகு வழக்கம்போல interesting ஆக ஒரு கதை சொல்வீர்களா?

வாத்தியார்: சொல்லலாம், ஆனால் நீங்கள் எல்லோரும் படித்தவற்றைக் கவனமாகத் திருப்பிப் படிக்கவேணும். மனதில் நல்லாகப் பதியவைக்கவேணும்.

பிள்ளைகள்: ஓம் ஐயா! நாங்கள் செய்வோம்.

வாத்தியார்: சரி, நல்லது. இன்னுமொரு குறள் அறிவுடைமை அதிகாரத்தில் இருந்து, கேளுங்கள்.

அஞ்சுவது அஞ்சாமை பேததைமை அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் கருத்து, அஞ்சுவது என்றால் பயப்படுவது. அஞ்சாமை என்றால் பயப்படாமை. இதனை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். இப்போது குறளின் முழுமையான கருத்தைப் பார்ப்போம். வாழ்க்கையில் பயப்படலேவண்டிய விடயங்களுக்குப் பயப்படாமல் இருப்பது முட்டாள்தனம். பயப்படவேண்டியவைக்குப் பயப்படுவதே அறிவுள்ள செயலாகும். (வாத்தியார் இதை எழுதிக்காட்டுகிறார்) பிள்ளைகளே! இதை அடுத்த வகுப்பில் நீங்கள் சொல்லவேண்டும். அப்பியாசப் புத்தகத்தில் எழுதியும் காட்டவேண்டும்.

கண்ணன்: ஐயா! இப்போது கதையைச் சொல்லுங்கோ.

வாத்தியார்: கண்ணா! நீ கதையை இன்னும் மறக்கவில்லையா?

கண்ணன்: அது எப்படி ஐயா! கதையை மறக்க முடியுமா?

அமுதா: ஓம்! நாங்கள் மறக்கவே மாட்டோம் ஐயா! சாப்பாட்டுக்குப் பிறகு யாராவது பாயசத்தை மறப்பார்களா?

வாத்தியார்: அடே! அது நல்ல உதாரணம் அமுதா!

பிள்ளைகள்: வகுப்புக்கு வந்ததுமே நீங்கள் என்ன கதை சொல்லப்போகிறீர்கள் என்று நாங்கள் காத்திருப்போம் ஐயா.

வாத்தியார்: சரி, சரி. இந்தக் குறளின் கருத்தை வைத்தே ஒரு கதை சொல்கிறேன். ஓர் ஊரில் உள்ள பிரதான வீதியில் வீட்டுக்குத் தேவையான உணவுப் பொருள்கள், பாத்திரம் பண்டங்கள் விற்கும் கடைகள் இருந்தன. அங்கே ஒரு கண்ணாடிப் பொருள்கள் விற்கும் கடையும் இருந்தது. அது கந்தசாமி என்பவரின் கடை.

கண்ணன்: அவர் தனியே அந்தக் கடையை நடத்தினாரா? உதவிக்கு யாரும் இல்லையா?

வாத்தியார்: அவர் பணத்தில் மிகவும் கவனமானவர். அதனால் யாரையும் நம்பி உதவிக்கு வைத்துக்கொள்ளவில்லை. அவராகவே தனியாளாக நடத்தி வந்தார். அண்மையில் அழகான பொருள்களை வாங்கிப் போட்டார். அதனால் கடை மிகவும் busy ஆகிவிட்டது. கந்தசாமியால் தனியாகச் சமாளிக்க முடியவில்லை. வேலைக்கு உதவியாக ஒரு ஆளை நியமிக்க யோசித்தார். அதனால், வேலைக்கு ஆள் தேவை என்று கடையிலே ஒரு விளம்பரம் (advert) போட்டார். பலர் வந்தார்கள். ஆனால் கந்தசாமிக்கு யாரையும் பிடிக்கவில்லை. கடைசியாக முருகன் என்றொருவர் வந்தார். பார்ப்பதற்கு நேர்மையானவராகவும், நல்ல குணமானவராகவும் மிகுந்த பணிவுள்ளவராகவும் காணப்பட்டார்.

கீதா: கந்தசாமிக்கு அவரைப் பிடித்திருக்கவேண்டுமே!

வாத்தியார்: ஆமாம், கந்தசாமிக்கு அவரை மிகவும் பிடித்தது. விட்டது. அவனும் கந்தசாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்வதை எல்லாம் கவனமாகக் கேட்டு அதன்படியே நடந்துவந்தான். ஒரு நாள் கந்தசாமிக்கு அவசரமாக வெளியே போகவேண்டியிருந்தது. முருகனைத் தனியே கடையிலே விட்டுப்போகவேண்டிய நிலை. போகும்போது முருகனைக் கூப்பிட்டு "நான் இல்லாதபோது கடைக்குள் எந்த ஒரு ஈ காக்கா எதையுமே உள்ளே விடாதே" என்றார். முருகனும் "ஓம் ஐயா!. ஈ காக்கா எதையும் உள்ளே விடமாட்டேன்" என்றான். கந்தசாமியும் நிம்மதியாக வெளியே சென்றார்.

தமிழ் வகுப்பு முடிவதற்கான மணி அடித்தது. மாணவர்கள் கதை முடியவில்லையே என்று ஆதங்கப்பட்டனர்.

வாத்தியார்: அடுத்த வகுப்பில் மீதிக்கதை சொல்வேன் என் பிள்ளைகளே!

# Glory of Lord Siva

OM I bow with folded palms to Lord Siva Who is the Lord of the universe, World Teacher, Who is the Destroyer of Tripuras (three cities of lust, anger and egoism), Who is the Lord of Uma, Gauri, Ganga, Whos is full of light, knowledge and bliss, Who is the Lord of Yogis, who is the storehouse of knowledge and Who is known by the various names as Mahadeva, Sankara, Hara, Sambhu, Sadashiva, Rudra, Soolapani, Bhairava, Uma-Maheswara, Neelakantha, Trilochana, Tryambaka, Viswanatha, Chandrasekara, Ardhanaareesvara, Maheswara, Neelalohita, Parama Siva, Digampara, Dakshinamurthi, etc.

How merciful He is! How loving and kind He is! He even wears the skulls of His devotees as a garland around His neck. He is an embodiment of renunciation, mercy, love and wisdom. It is a mistake to say that He is the destroyer. Lord Siva in reality is the regenerator. Whenever one's physical body becomes unfit for further evolution in his birth, either by disease, old age or other causes, He at once removes this rotten physical sheath and gives a new, healthy, vigorous body for further quick evolution. He wants to take all of His children to His Lotus feet quickly. He desires to give them His glorious 'Siva-Padam'. It is easier to please Siva than to please Hari. A little Prem and devotion, a little chanting of His Panchakhara (the Mantra OM NAMAH SIVAYA which has five letters) is quite sufficient to infuse delight in Siva. He gives boons to His devotees quite readily. How large is His heart! He gave Pasupada Astra (a weapon) to Arjuna, without any difficulty, for his little penance. He gave a precious boon to Bhasmasura. In Kalahasthi, near Tirupathi, He gave Darshan to Kannappa Nayanar, the devoted hunter. In Chidamparam, even the untouchable saint Nandan had the Darshan of Lord Siva. He ran with tremendous speed to make the boy Markandeya immortal, when he was in the clutches of the God of Death - Yama. Ravana of Lanka pleased Lord Siva, with his Sama-chantings (Sama is one of the three Vedas). He initiated the four Divine Youths (Sanaka, Sanandana, Sanathana, Sanatkumara) into the mysteries of Jnana, in the form of Dakshinamurthy. In Madura He assumed the form of a boyand carried earth on His head for a devoted lady. Look at His unbounded mercy for His devotees! When Brahma and Vishnu went to find out the Head and Feet of Lord Siva, He assumed the form of an infinite, expansive blaze of light. They were baffled. How magnificent and self-effulgent He is! He lived for several years in the house of Pattinathu Swami of South India, as his adopted son, and disappeared, after fiving him a small note: 'Even the broken needles will not follow you after death'. The reading of this note was the starting point of attainment of Jnana for the Swami. Why do you all not attempt this very second, with sincerity, to realise God?

continued on page 44



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேக்கிழார்

Sēkkilān Mādēvadigal Rāmadēva (12th century CE ) known popularly by his family name as Sekkizhar was a saint and a contemporary of Kulottunga Chola II. He compiled and wrote the Periya Puranam (Great Story or Narrative) in 4253 verses, recounting the life stories of the sixty-three Shaiva Nayanars, the devotees of Shiva. Sekkizhar himself was later canonised and his work, the Periyapuranam became the twelfth and final book of the sacred Saiva canon.

Sekkizhar was born as Arulmozhithevan, meaning the one of the divine language. He was a native of Kundrathur village (a suburb of the present-day Chennai), a sub-division of Puliyur-kottam in Thondaimandalam. Sekkizhar was a child of precious genius and having noticed this, king Anapaya, that is Kulothunga Chola II, appointed him as his Prime Minister on account of his talents. His life is celebrated by Umapati Sivacharya in his fourteenth century work (1313 CE) called Sekkizhar Nayanar Puranam. Sekkizhar had the title Uttama Chola Pallavan and his brother, the title Tondaiman Pallavaraiyan. Sekkizhar is also called Ganga-kula tilakar (the glory of the Ganga race) and Bagirathi-kula tilakar (the glory of the Bhagiratha race) by Umapati Sivacharya in his work, the Sekkilar Puranam. The Guru Puja festival for Sekkizhar is celebrated annually in the month of Vaigasi-Poosam (May-June) Sekkizhar built Nageswarar temple in KUNRATHUR in Chennai. There is a separate temple for him in Kunrathur. The famous Dharmapuram Swaminathan lived in Kunrathur recently.

Compiled by C Vedanarayanan

The Famous Nalvars:
These nayanmars were Gnanasambandar ( 6th century ), Tirunavukkarasar ( 6th century ) ,Sundara moorthy swamigal ( 7th century ) and Manikkavasagar aka Vadhavurar. Vathavurar time is yet to be ascertained.These four composed the first 8 thirumurais.

Place of birth:
Gnanasambandar was born in Sirkazhi in Kavuniya andhanar community.Sirkazhi had twelve names. It is a town near Chidambaram ( Thillai ) , Vaitheeswarar kovil ( Pullirukkuvelur ) and Mayiladuthurai. It has a very big Sivan temple.

Appar ( Tirunavukkarasar ) was born in Tiruvamur , a beautiful, small village near Tirunavalur, another village.Aamur is between Tirunavalur and Panruti ( Tiruvathikai ). There is a Sivan temple and a koyil for Tirunavukkarasur in Aamur.

Sundaramurthy swamigal was born in Tirunavalur ( Tirunamanallur ), two kilometres from the artery GST ( Grand southern trunk road ). River Kedilam flows in this village. There is a temple which houses Sundaramurthy Swamigal, Sivan, Vishnu and Amman. The current temple was built on an old temple.

Tiruvathavur is in Pandyanadu not far from Madurai. A famous vaishnava temple called Tirumohur is near Vathavur. There is a beautiful Sivan temple and a separate temple for Manikkavasakar in Tiruvathavur.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Kunrathur


Seerkazhi



Tirunavalur rajagopuram


Tirunavalur sundarar sannidhi


Tiruvennainallur old mandapam


After renovation


Aamur appar koyil


Tiruvathavur  Manikkavasakar


Tiruvathavur Sivan



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Hatha Yogis awaken the Kundalini Shakti that is lying dormant in the Muladhara Chakra, by Asana, Pranayama, Kumbhaka, Mudra and Bandha, taking it up through different Chakaras ( centres of spiritual energy) viz: , Swadhisthana, Manipura, Anahata, Vishuddha and Ajna, and join it with Lord Siva at the Sahasrara , the thousand petalled lotus at the crown of the head. They drink the nectar of Immortality. This is termed Amrita-Srava. When the Shakti is united with Siva, full illumination comes to the Yogi.

Lord Siva represents the destructive aspect of Brahman. That portion of Brahman that is enveloped by Tamo-guna-pradhana-Maya is Lord Siva Who is the all-pervading Iswara, and Who also dwells in Kailasa. He is the storehouse of wisdom. Siva minus Parvathy is pure Infinite Being. With Maya, He becomes Saguna Brahman (personal God) for the purpose of pious devotion of His devotees. Devotees of Lord Rama must worship Siva also. Rama Himself worshipped Lord Siva at the famous Rameshvaram. Lord Siva is he Lord of ascetics and Lord of Yogis robed in space (naked - Digamparas)
His Trisul (trident) that is held in His right hand represents the three Gunas - Satva, Rajas and Tamas. That is the emblem of sovereignty. He wields the world through these Gunas. The Damaru (drum) in His left hand represents the Sabda Brahman (OM) from which all languages have been formed. It is He Who formed the Sanskrit language out of the sound of the Damaru.

The wearing of the crescent moon on His head indicates that He has controlled the mind perfectly. The flow of the Ganga represents the nectar of immortality. Elephant represents, symbolically, the Vriti (mental modification) of pride. Wearing the skin of an elephant denotes that He has controlled pride. The tiger represents lust and His sitting on the skin indicates that He has conquered lust. His holding a deer in one hand indicates that He has removed the tossing or wandering nature of the mind. Deer jumps from one object to another. His wearing of serpents around His neck denotes wisdom and eternity. Serpents live for a large number of years, and represent Time which glides away smoothly! He is Trilochana (Three eyed), in the centre of whose forehead is the third eye, the eye of wisdom. Nandi, the bull that sits in front of the Siva Lingam represents Pranava (OM). The Lingam represents Adwaita (monism). It points out 'I am one without a second' just as a man raises his right hand above his head pointing out his right index finger only.

Kailas Hills in Tibet are a huge range with a central, beautiful, naturally carved and decorated shining peak, eternally clad with silvery snow, 22,980 feet above sea level. Some take the height to be 22,028 feet. This particular peak is in the form of a natural, huge Siva Lingam. This is worshipped as the form of Lord Siva from a distance. There is neither a temple nor a priest, nor daily worship here. I had the fortune to have Darshan of Kailas through the grace of Lord Siva on July 22nd, 1931. I even climbed with panting breath to the foot of Kailas peak where the riverIndus takes its origin. It is a picturesque and soul stirring scene. You will have to ascend from Didipha Guha, the first halting place in the Parikrama (circumambulation) of Kailas which covers 30 miles. It takes three days. On the way comes the famous and sacred Gauri Kund which is eternally covered with snow. You will have to break the snow when you take a bath.

Courtesy: Sixty-Three Nayanar Saints by Swami Sivananda Divine Life Society 1962



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

elakkiaonline.com

Order at our Sri Lankan and Indian online supermarket delivered to your doorstep

- Sri Lankan and Indian Vegetables, Groceries
- Frozen Seafood & Fish
- Savoury Snacks
- Ready Meals




FREE DELIVERY ON ORDERS OVER £40

*Terms and conditions apply

Wish you a very happy and prosperous new year

www.elakkiaonline.com

Follow us on

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WESTERN
Jewellers



வகை வகையான வடிவங்களில்
தரமான தங்க நகைகளை குறைந்த
விலையில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்
உங்கள் வெஸ்டன் ஜுவலர்ஸ்.



# FIRST SRILANKAN JEWELLERY SHOP IN UK

## SPECIALISE IN 22CT GOLD WHITE GOLD, PLATINUM & DIAMOND JEWELLERY.

**TOOTING BRANCH**
*230 UPPER TOOTING*
*LONDON SW17 7EW*
*TEL : 020 8767 3445*

**WEMBLEY BRANCH**
*5, PLAZA PARADE, 29 - 33 EALLING ROAD,*
*WEMBLEY, MIDDLESEX HAO 4YA*
*TEL : 020 8903 0909*

**SILK EMPORIUM**

SEASON'S BEST IS SUMMER, SAREE'S BEST IS SILK EMPORIM SAREES
122 UPPER TOOTING ROAD
LONDON SW17 7EN
TEL : 02086721900

OPENING HOURES : MONDAY - SATURDAY (10.30 AM - 6.30PM), SUNDAY (11.30AM - 6.30PM)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org